ஓம்

தருமசீலன்.

"அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு."

(All Rights Reserved.)

புத்தகம் 6	உருத்திரோற்காரி௵ ஐப்பசி௴ 1923௵ அக்டோபர்௴	சஞ்சிகை 7.

நீதிச் செய்யுட் சிந்தாமணி.

பெண்ணாசையால் வந்த பாவத்தை மாதர் சேர்க்கையோடு
தவஞ்செய்து போக்க முயலல் தவறென்பது.

"வெண்ணிறத் துகிலி னுங்கண் வீழ்ந்துமா சாகி நின்ற
ஒண்ணிற வுதிரந் தன்னை யுதிரத்தா லொழிக்க லாமே
பண்ணிறக் கிளவி யார்தம் பசையினாற் பிறந்த பாவம்
கண்ணிற முலையி னார்தங் கலவியாற் கழிக்க லாமே.

(இ-ள்) (பெண்ணாசையால் வந்த பாவத்தைப் போக்கத்துறந்தும், மனைவியரோடு கூடி காட்டில் தவஞ் செய்கின்றவர்களே!) வெள்ளை நிறம்பொருந்திய வஸ்திரத்திலே வீழ்ந்து கறையாகி நின்ற ஒள்ளிய நிறம்பொருந்திய இரத்தத்தை அந்த உதிரத்தில் தோய்த்துப் போக்கி விடலாமோ? அங்ஙனம் தோய்த்தால் மேலுமன்றோ கறையாகும். அதுபோல யாழிசையின் குணம்பொருந்திய சொற்களையுடைய மாதர்களுடைய விருப்பத்தினால் உண்டான பாவத்தை அந்த மாதர்களோடு கலந்து காட்டில் தவஞ் செய்வதாலே போக்கி விடலாமோ? அப்படிச் செய்வதால் மேலும் பாவமல்லவா வந்து சேரும்." என்பதாம்.

(வி-ரை.) பெண்ணாசையால் உலகபந்தத்தில் அசப்பட்டு வருந்துபவர் அந்தப் பாவத்தைப்போக்கி நற்கதியடைய வேண்டுமானால், சகலத்தையும் ஒழித்துப் பெண்களையும் துறந்து உலகப்பற்றின்றித் தவஞ் செய்யவேண்டும். அங்ஙனம் செய்தால் மாத்திரமே மோக்ஷ மடையலாம். அவ்வாறின்றி மனைக்கிழத்தியரோடு தவஞ் செய்யப்புகின் மேலும் பந்தத்துக்கே ஏதுவாகும். அது, குளிக்கப்போய் மேலும் சேற்றைப்பூசிக் கொண்டதற்குச் சமானமாம். நிறம், குணம், வண்ணம். ஒழிக்கலாமே கழிக்கலாமே என்பவற்றிலுள்ள ஏகாரங்கள் வினாப் பொருளன.

(சீவகசிந்தாமணி 1433).

தருமசீலன்.

உருத்திரோற்காரி௵ ஐப்பசி௴.

"சூதும் வாதும் வேதனை செய்யும்"

இதன் பொருள்:—" சூதும்-சூதாடுதலும், வாதும்-(கண்டவரோடெல்லாம் வீணே) வாக்குவாதஞ் செய்தலும், வேதனைசெய்யும்-துன்பத்தைச் செய்யும்" என்பதாம்.

சூதாடுதலானது பஞ்சமாபாதகத் தொழில்களுள் ஒன்றாகும். முதலில் வரும்படி வருவதுபோற் காட்டிப் பின்னர்க் கையிலுள்ள பொருள்களை யெல்லாம் இழக்கச் செய்துவிடும். இதனைக் கைக்கொள்வோர், முதலில் சிறிது பொருளை வைத்தாடுவார்கள்; அதில் இரட்டிப்பு இலாபம் வந்துவிடும். மேலும் மேலும் அப்படியே ஊதியம் கிடைக்குமென்னும் ஆசையால் அவர்கள் அதிகப் பொருளை வைத்தாட ஆரம்பித்து விடுவார்கள், கொஞ்ச நேரம் சென்று அவர்கள் கையிலுள்ள பொருளெல்லாம் தொலைந்துவிடும். அதன்மேலும் அவர்கள் போன பொருளைத் திரும்ப ஜெயித்துவிடலா மென்னும் ஆசையால் வீடு, நிலம், நகை, பாத்திரம் முதலியவற்றை யெல்லாம் வைத்தாடித் தோற்று விடுவார்கள். முடிவில் தரித்திரத்தால் பீடிக்கப்பட்டு வருந்துவார்கள். இதற்கு நளன், தருமர் முதலியவர்களே சாக்ஷியாவர். அப்படித் தரித்திரம் வந்துவிடவே அவர்கள் மேலும் சூதாடப் பொருள் தேடவேண்டித் திருடப் போவார்கள்; அதனால் கலகம் விளையும்; அக்கலகத்தால் கள்ளருந்திக் கொலையும் செய்ய ஆரம்பிப்பார்கள்; பெண்களைக் கற்பழித்துக் கொள்ளை யடிக்கவுந் துணிந்து விடுவார்கள். முடிவில் இந்தச் சூதானது அவர்களைப் பஞ்சமாபாதகங்களுள் இழுத்துக்கொண்டு போய்விடும். இன்னும் இது அவசியமான காரியங்களையும் கவனியாமலிருக்கச் செய்துவிடும். இதற்குதாரணமாக ஒரு கதை யுண்டு: ஒருவன் சூதாடிக் கொண்டிருந்தான். அவன் தாய் சீக்காயிருந்தவளுக்கு உயிர் போகப்போனது; அதை ஒருவன் வந்து அவனுக்குத் தெரிவித்தான். அவன், வந்தவனிடத்தில், 'நீபோய் அவளுக்கு வேண்டிய பரிகாரங்களைச் செய்; நான் இந்த ஆட்டத்தை முடித்துவிட்டு வந்துவிடுகிறேன்' என்று சொல்லிவிட்டுச் சூதாட்டத்தைக் கவனித்துக் கொண்டிருந்தான். வந்தவன் திரும்பிப்போய் அவள் இறந்து விட்டபடியால் மீண்டு வந்து சூதாடியிடம், 'உன்தாய் இறந்து விட்டாள்' என்று சொன்னான். அதற்கும் அவன் பதறாமல், வந்தவனிடம், 'பிணத்தைக் குளிப்பாட்டி எடுத்துக்கொண்டு வரும்படி அங்கேயிருப்பவர்களுக்குச் சொல்; பிணம் இந்த வழியாகத் தானேவரும்; அதற்குள் இந்த ஆட்டத்தை முடித்துவிட்டு அவர்களுடன் கூடிக்கொள்கி

றேன்' என்று சொன்னான். வந்தவன் போய்ச் சுற்றத்தார்களிடம் அவன் கூறியதைக் கூறினான். அவர்கள், 'வீட்டில் செய்யவேண்டிய சில கிரியைகளுக்குப் பின்னை வேண்டுமே' என்று வந்து சூதாடியை வலிதிற் பிடித்திழுத்துக்கொண்டு போனார்கள். இப்படிச் சூதானது, தாயிறந்ததையும் கவனிக்காமலிருக்கச் செய்துவிடுமென்றால் இதைப்பற்றி வேறென்ன சொல்லவேண்டும்; இதனால் இம்மையில் துன்பமாவதோடு மறுமையிலும் நரகம் கிடைக்கும். இதனாலேயே திருவள்ளுவரும்

"ஒன்றெய்தி நூறிழக்குஞ் சூதர்க்கு முண்டாங்கொல்
நன்றெய்தி வாழ்வதோ ராறு."

என்று கூறினார்.

இது நிற்க; ஒருவன் கண்டவரோடெல்லாம் வாக்குவாதம் செய்துகொண்டு திரிவானேயானால் அவனுக்குப் பலருடைய விரோதமும் ஏற்படும். அதனால, வீண்வம்பு வழக்குகளும் உண்டாகும். அவற்றால் பொருட் செலவு நேரும்; அதனால் முடிவில் குடிகெட்டே போய்விடும். பின்னர் ஆயுட்காலம் வரை அவன் துக்கத்தில் மூழ்கி வருந்துவான். ஆகலின், சூதும்வாதும் ஒருவனுக்கு வேதனை செய்யுமென்பதை ஔவையார் இந்நீதி கூறியதால் விளக்கிக் காட்டினார்.

இப்படிப் பெரியார் பற்பல நீதிகளைக் கூறியிருந்தும் இக்காலத்தில் பலர் சூதாட்டத்தை மிக்க விருப்பமாகக் கொண்டாடி கடுதாசி ஆடுதல் முதலிய தீத்தொழில்களைத் தீவிரமாகச் செய்து வருகின்றனர். சிலர், வீண் தர்க்கங்கள் தொடுத்து வம்புவழக்குகளை இழுத்துக்கொண்டு திரிந்து அவஸ்தைப் படுகின்றனர். இவர்கள், நம் பெரியார் செய்த நீதி நூல்களைச் சிரத்தையுடன் படித்துணராமையினாலேயே வீண் தொந்தரவுகளுக் குள்ளாகின்றனர். இத்தகைய நீதிகளைக் கடைப்பிடித் தொழுகுவார்களாயின் என்றென்னும் இன்பத்தையே அடைவார்கள்.

(திருவருட்சகாயம்.)

நற்சுகக் கண்ணி

(முன்தொடர்ச்சி-புத்தகம்-6, சஞ்சிகை-5, பக்கம்-99.)

26. நற்பிள்ளை பெற்று நவையறவே போதித்துப்
பொற்பாக வேவளர்க்கும் புண்ணியர்க்கு நற்சுகமே.

27. மனம்போல் நடக்கும் மனைவிதனைப் பெற்றோர்க்குத்
தினந்தினமு மிந்த ஜெகத்திலே நற்சுகமே.

28. சொல்லாமல் ஏவல்செய்யுந் தொண்ட னுடையார்க்கு
இல்லாத தொன்றில்லை என்றென்றும் நற்சுகமே.

29. வீண்வம்பு பேசி மிகச் செருக்குங் கர்விகளைக்
காண்ப தொழிப்பார்க்குக் காசினியில் நற்சுகமே.

30. சண்டை மிகுந்திடவே தர்க்கந் தொடுக்குமிடம்
அண்டா திருப்பவருக் களவிலா நற்சுகமே.

31. இழிஜனங்களே கூடு மெவ்விடத்தும் போகாமல்
விழிமூடி யுள்ளிருக்கு மெய்த்தவர்க்கு நற்சுகமே.

32. தற்பெருமை பேசுந் தருக்கரோடு பேசாமல்
இற்குள் ளிருப்பவருக் கிணையிலா நற்சுகமே.

33. எல்லோரையும் மடக்கி யிருக்க நினையாமல்
நல்லோராய்த் தாழ்பவர்க்கு நாடெங்கும் நற்சுகமே.

34. கோட்சொல்லியே திரியுங் கொடியோர் பொய்வார்த்தைதனைக்
கேட்கா திருப்பவர்க்குக் கிட்டிடுமே நற்சுகமே.

35. அண்டிக் கெடுக்கும் அயோக்கியரைச் சேராமல்
எண்டிசையும் போற்ற இருப்பார்க்கு நற்சுமமே.

36. நன்றிகெட்ட சண்டாளர் நண்பொழித்து நேர்வழியில்
நின்றவர்க்கெந் நாளும் நிலைத்திருக்கும் நற்சுகமே.

(தொடரும்)

சேம்பைக்கிழார்.

210455

இரகு வம்சம்

(முன்தொடர்ச்சி புத்தகம்-6, சஞ்சிகை-6, பக்கம் 129)

(நான்காவது ஸர்க்கம்.)

அப்பால் தந்தையாரிடமிருந்து இராஜ்யத்தைப் பெற்றுக்கொண்ட இரகுராஜன், அந்தித்தபனனிடத்திலிருந்து ஒளிபெற்றிலகும் அங்கித் தேவனுரைப்போல நன்கு விளங்கினான். திலீபனுக்குப் பிறகு அவன் இரகுபட்ட மெய்தினனெனக் கேட்ட பகையரசர்களின் பண்டைய கோபக்கனலானது நெட்டுயிர்ப்பினாற் பொங்கிக் கொழுந்து விட்டெரியத் தலைப்பட்டு விட்டது. நன் மக்களைப் பெற்ற பிரஜைகள் * 'இந்திரத்துவஜ'த்தைக் கண் கொட்டாமற் கண்டு

---

* அரண்மனை வாயிலில் பிரதிஷ்டை செய்த நாற்கோணமான கொடிக்கு 'இந்திரத்துவஜம்' என்று பெயர்.

மகிழ்வதுபோல, அவ்விரகுவின் அபிவிருத்தியைப் பார்த்துக் களிப் படைத்தனர்.

யானைபோல் நடக்கும் இரகு, தந்தையாகிய திலீபன் தந்த ஸிம்மாசனத்திலமர்ந்ததும், பகைவர் நாடுகளை யெல்லாம் ஒருங்கே ஜெயித்துக் கைப்பற்றிக் கொண்டான். ஜெயலட்சுமி, மறைவாயிருந்துகொண்டு பிரஜா பரிபாலனத்தில் தீக்ஷை செய்து கொண்டிருக்கும் இரகுவை, ஒளிக் கூட்டத்தால் லக்ஷிக்கக் கூடியதாமரைக் குடை பிடித்துச் சேவித்துக்கொண்டிருந்தாள். ஸரஸ்வதி தேவியும் * வந்தியர்களிடம் தக்க காலத்தில் இருப்பைப் பெற்றுக் கொண்டாடத் தகுந்த இரகு ராஜனைப் பொருள்நயமுள்ள தோத்திரங்களால் துதித்துக்கொண்டே நெருங்கத் தொடங்கினாள். பெருமை பொருந்திய மனு முதலிய பற்பல மன்னர்களின் ஆட்சிமாட்சிகளையும் பார்த்துப் பார்த்தனுபவப்பட்ட பூதேவியும் தான் முன்பு எவராலும் ஆளப் படாதவள்போல அரசன்மீது மிக்க அன்பு பூண்டொழுகினள்.

அவ்வரசன், அதிகங் குறைவின்றிக் குற்றத்திற்குத் தக்க தண்டனை விதித்துப் பரிபாலித்து சமப்படக்கிடந்த சீதோஷ்ண மேற்ற தென்றற் காற்றைப்போன்று யாவர் மனதையும் வசியப்படுத்தி நின்றதால், பிரஜைகள் யாவரும் மாமலரின் வாசனையை விடக்கனியின் வாசனை சிறந்திருப்பதுபோன்று திலீபன் ஆட்சித்திறனைவிட இரகுவின் ஆட்சியே பன்மடங்குமிகச் சிறந்ததெனக் கொண்டாடினார்கள்.

சாஸ்திரமுணர்ந்த மதியூகிகள், தருமமாயும் கபடமாயும் போர் புரியும் வழியையுணர்த்தவும், அரசன் அவற்றுள் அல்லவை நீக்கி நல்லவை கொள்ளவும் பஞ்ச பூதங்களின் குணங்கள் ஒருங்கே பயனெய்தவுமாகிய இரகுவின் செய்கைகள்யாவும் நாளுக்குநாள் புத்தம் புதிய பூரிப்புகளைக் கொண்டு நின்றன.

சந்திரன் யாவரையும் மகிழ்விப்பதனாலும் † தபனன் தவிக்கச் செய்வதனாலும் உண்மையான பெயரைப் பெற்றிருப்பதுபோல, அவ்விரகுவும் பிரஜைகளை ரஞ்சனஞ்செய்தமையால் அவ்விதமே ஆயினன். செங்கயற் கண்களும் செவிகளும் சேர்ந்திருந்ததாயினும், அவன், சூக்ஷ்மமான விஷயங்களை யறிவிக்கும் சாஸ்திரத்தைக் கொண்டே காரியங்களைச் செய்துவந்தான்.

‡ சரத்காலமாகும் பெண், இராச்சியத்தை ஸ்திரப்படுத்தின

* வந்தியர் = துதிசெய்வோர். † தபனன் = சூரியன். ‡ சரத்காலம் = முன்பனிக்காலம்.

தால் கவலையுற்றிருக்கும் இரகுவைக் காணுமாறு புறப்பட்டு வந்து சேர்ந்தாள். அவள் தாமரைமலர்களை பறிகுறிபாகவுடைய ஜெய லட்சுமியாரைப்போ லிருந்தனள். சகிக்கவொண்ணாத இரகுவின் * பிரதாபமும் சூரியனது † ஆதபமும், மழைபெய்து இலேசான மேகங்கள் வழிவிட்டவுடன் திசையெங்கும் பரவின இந்திரன் மழை பேய்விப்பதற்காக வில்லைக் கிரகித்ததும் இரகுவும் ஜெயம் பெறுவதற்காக வில்லை யெடுத்தனன்; ஏனெனில், இவ்விருவரும் முறையே பிரஜைகளின் க்ஷேம நிமித்தமாகவே வில்லைப் பெற்றிருக் கின்றனர்.

ஒள்ளிய வெண்டாமரைகள் குடை பிடிக்கவும் நாணற்பூக்கள் சாமரையாட்டவும் வந்த சரத்காலப் பெண், பூச்சகரவெண்குடை யின்கீழ் வீற்றிருந்து காசமலர்போன்ற சாமரை யிரட்டப் பெற்று விளங்கும் இரகு புங்கவனை ஒத்திருந்தாளாயினும் அவனது சோ பையைப் பெறவில்லை. அப்பொழுது குடிகள் அருள்மிகுந்த முக முள்ள இரகுவையும் நிர்மலகாந்தியுள்ள சந்திரனையும் சமமாகப் பார்த்துப் பார்த்து மகிழ்ந்தனர்.

இரகுவின் கீர்த்தியின் விளக்கத்தால் மிளிரும் பல அமிசங் களே அப்புவாகவும் அன்னக் கூட்டங்களாகவும், ஆம்பல் மலர்களா கவும் ஆகாய தாரைகளாகவும் விளங்கின. நெற்கதிர்களைக் காக்கும் உழத்திப் பெண்கள் யாவரும் கரும்பு நிழலிலிருந்து கொண்டு காவ லனுக்கு இளமையிலிருந் தேற்பட்ட புகழைக் குறித்துக் கானஞ் செய்தனர். மாதவம் பொருந்திய அகஸ்தியரின் உதயத்தினால் தண்ணீர் தெளிந்தது; மகாபலம் பொருந்திய இரகுவின் உதயத்தி னால் தோற்றுவிடுவோமென்று பகைவரின் மனம் கலங்கிற்று.

மதம்பிடித்துப் பெரிய திமில்களோடு ஆற்றங்கரையில் முட்டி களையாடும் எருதுகள், விலாசத்தினால் இனியதான இரகுவின் சௌரியத்தை அநுசரித்தன. மதகந்தமுள்ள ஏழிலைப்பாலைகள் ஏந்தல்பவனி யேறும் வேழங்களின்மீது இதழ்களைச் சொரிந்தன. அதனால் அவ்வேழங்கள், அசூயையினாற் பெருக்குபவைபோல, ஏழு விதமாய் மதநீரைப் பெருக்கின. இவ்வாறிருக்கையில், ஆற்றின் வெள்ளத்தையும் வழியின் சேற்றையும் உலர்த்திக்கொண்டு வந்து நின்ற சரத்காலப் பெண் இரகுவை உற்சாகப்படுத்தி யுத்தயாத்திரை செய்யுமாறு ஏவினள். பிறகு அரசன், முதன் முதற்சென்று தனது

* பிரதாபம்-வீரம். † ஆதபம் = வெயில்.

அசுவக் கூட்டங்களுக்கு அயினிசுற்றி அவியால் திருப்தியடைந்துள்ள அக்னி தேவரிடம் ‘சுவாலை’ யென்னும் கரத்தினால் வெற்றி வரம் பெற்றெழுந்தான். உடனே பாக்கிய சாலியாகிய பார்த்திவன் முரசுமுழக்கித்தன் அறுவகைச் சேனைகளோடு திக்கு விஜயஞ் செய்வதற்காகத் தன்னிடம் விட்டுப் புறப்பட்டான். அப்பொழுது அரசன் தனது இருப்பிடத்தையும் துர்க்கத்தையும் மறைத்துக் கொண்டிருந்தான். இரகு புங்கவனை எண்ணிறந்த சேனைகள் பின்பு காத்துக் கொண்டிருந்தன.

மந்தர மலையின் சுழற்சியினால் பாற்கடலிலெழுந்த பேரலைகள், இவலைகளைத் திருமால்மீது தெளித்ததுபோல, நகரத்துள்ள வயது முதிர்ந்தமகளிர் யாவரும் ஜெயப்பொரிகளை வாரியிறைக்கவும், இந்திரனையொத்த இரகுவின் தேர்செல்லும் வேகத்தாலெழும்பும் மண் தூசுகளினாலும் சுற்றிலும் சூழ்ந்து செல்லும் மேகம்போன்ற யானை கூட்டங்களாலும் மண்மேலும் மழைகிழம் விளங்குவதுபோற் சுழன்று காட்டவும், காற்றினாலசையும் கொடிகளின் சத்தங்கள் பகையரசரை அதட்டுவதுபோலத் தொனிக்கவும், முதன் முதல் கிழக்குத் திசையை நோக்கி அவன் செல்வானாயினன். முதலில் பிரதாபமும் பிறகு கோலாகல சத்தமும் பின்பு தூளியும் பின்னர் சேனையுமாகச் சென்றதால், அவன் சேனை, அணிவகுப்புகள் போற் பகுக்கப்பட்டுப் பறந்து விளங்கிற்று.

செல்லும் பாதையில், ஆங்காங்கு படைகளுக்கு வேண்டிய நீர் நிலைகளை யுண்டாக்கியும். ஆழமுள்ள ஆறுகளைச் சுலபமாகக் கடந்தும், காடுகளை யழித்துக்கொண்டு, பெருஞ் சேனைகளோடு கீழ்த் திசைக்கடலை நாடிப்போகும் மன்னவன், முன்பு சிவபெருமான் சிரஸிலிருந்து நழுவிய கங்கையை அழைத்துச் சென்ற ‘பகீரத’னைப் போல் விளங்கினான்.

செல்லும் மார்க்கங்களிலுள்ள மன்னவர்களோடு யுத்தஞ்செய்து ஜெயித்துச் செல்லும் இரகுவுக்குத் தோல்வியுற்ற அரசர்கள் கப்பங் கட்டவிசைந்து வழிவிட்டதும் மலர்கள் சிந்தும் படிப்பல் மரங்களை வாரியடிக்கும் யானைகளுக்குக் காடுகளில் வழியேற்பட்டதுமான இவ்விரண்டு மார்க்கங்களும் ஒன்றுபோற் பிரகாசமாகக் காணப்பட்டன.

இவ்வாறு கீழ்த் திசையிலுள்ள தேசங்களை ஆக்கிரமித்துக் கொண்ட அரசன், பனங்காடுகளடர்ந்துள்ள கீழ்த்திசைக் கடற்

கரையை யடைந்தனன். நீர் நொச்சில், வணக்கத்தினல் ஆற்று வேகத்திலிருந்து தன்னைக் காத்துக் கொள்வதுபோல சிம்மதேசத்து அரசர்கள், பகைவரை யழிக்கும் இரகு புங்கவனிடம் நமஸ்கரித்துக் காணிக்கை கொடுத்துத் தம்மை காத்துக்கொண்டனர். பின்பு இரகு, அவ்விடம் யுத்த முரசறைவதைக் கேட்டு 'வங்க' தேசத்துக் காவலர்கள் யுத்த சன்னத்தராய், ஓடங்களின் மீதூர்ந்து புரிந்த பெரும்போர் முற்று மழித்து வெற்றிகொண்ட பிறகு, ஆங்குள்ள கங்கைத்தீவுகளிலெல்லாம் * ஜெயஸ்தம்பம் நாட்டினன். பிறகு தோல்வியுற்றவர்களும் ஜெயித்த நாட்டிற்குப் புதிதாக நியமிக்கப் பட்டவர்களுமான 'வங்க' தேசத்தவர் யாவரும் அடிவரையில் முடிவணங்கிய மணிகளேயேற்ற கதிர்கள்போன்று மன்னவனை வணங்கிக் காணிக்கை செலுத்தி மகிழச்செய்தனர்.

பின்னர் இரகு புங்கவன் தன்படை வேழங்களை யணையாகக் கொண்ட சேனைகளுடன் 'கபிசை' நதியைக்கடந்து சென்று, 'உத்கல' தேசத்து மன்னவர்களால் துணைவழி காட்டப்பெற்று 'களிங்க' தேசத்தை நோக்கிப்போனன். பிறகு மாவுத்தன், யானைத்தலையில் அங்குசத்தைச் செலுத்திக் கதறச் செய்வதுபோல, மகேந்திர கிரி'யின் சிரசில் இரகு தன் பிரதாபத்தைச் செலுத்தி யுத்தமுரசு முழக்கிநிற்க, அதுகேட்ட களிங்கராஜன், யானைப்படைகளோடு வந்து, சிறகரிந்த கொற்றவனை யெதிர்க்கும் குன்றினைப்போன்று இரகு புங்கவனைச் சூழ்ந்து போரியற்றினன். பிறகு இரகு, பகைவர்விடுத்த கணைகளைத் தாங்கிக்கொண்டே விதிப்படி வெற்றிபெறுவதற்கு மங்களஸ்நானம் பண்ணினவன்போலப பகைவரைவென்று ஜெயலட்சுமியைப் பெற்ருன். பிறகு இரகுவின் போர்வீரர்கள், அக்கிரியில் வேண்டும் வசதிகளை யேற்படுத்தி, அவற்றிலமர்ந்து தென்னங்கள்ளை வெற்றிலைகளால் பருகிப் பகைவர் புகழைப் போக்கினர். களிங்க தேசத்தரசன், தோல்வியுற்று வணங்கிக் காணிக்கை செலுத்தினதும், தர்மத்திற்காகப் போர்புரியும் இரகுராஜன், மீண்டும் அத்தேசத்தின் ஆட்சியை அவனுக்கே அளித்துப்புகழை மட்டும் பெற்றுக்கொண்டு திரும்பினன்.

பின்னர் வெற்றியைப்பற்றி யோசியாத இரகுபுங்கவன், பழுத்தகமுகுமரங்கள் நிறைந்துள்ள கடற்கரை வழியாகவே அகஸ்தியர் வசிக்கும் தென்திசைக்குச் சென்ருன். அவன், சேனைகளோடு

* ஜெயஸ்தம்பம் = வெற்றித் தூண்.

காவேரிநதியைக் கடக்கையில், வேழங்கள் தமது மதநீரைக் காவிரியிற் கலக்கவும், சேனைகள் தமது சந்தனப் பூச்சைக் கரைத்துவிடவும், காவேரிநீர் களங்கினமையால், சமுத்திரராஜன் அவளிடம் நம்பிக்கையைக் குறைத்துக்கொள்வானென்று தோன்றிற்று.

இவ்வாறு இரகு, சேனையோடு வழியைக்கடந்து 'மலய'பர்வதத்தின் அடிவாரத்தில் வந்திறங்கியதும், ஆங்கு மிளகுக் காடுகளிலுள்ள பறவைகள்யாவும் அரசன் படையைக்கண்டு பயந்து அங்குமிங்கும் பறந்து அரற்றித்திரிந்தன. குதிரைக் குளம்புகளால் நசுக்கப்பட்டு தூளாய்ப்பரந்த ஏலமெல்லாம் மேலே கிளம்பிச்சமவாசனையுள்ள மதயானைகளின் கன்னங்களில் அப்பிக்கொண்டது. அவ்விடம் யானைகள் காற்சங்கிலியை யறுத்துக் கொண்டபோதிலும், பாம்பு சுற்றியரைந்து பள்ளமான சந்தனமரத்தில் கட்டியிருந்த கழுத்துச் சங்கிலிகள் நழுவாததால் ஓட முடியவில்லை. தெற்கு திசையில் சூரியதேஜசும் குறைகின்றது; ஆயினும் அவ்விடமுள்ள பாண்டியர்கள், இரகுவின் பிரதாபத்தைக்கண்டு மனஞ் சகிக்காது இரகுவிடம் வந்து வணங்கி பொருனை நதிக்கண்ணுண்டான முத்துக் குவியல்களை யெல்லாம், தத்தம் புகழைக் கொடுப்பதுபோல் மன்னனுக்கு அர்ப்பணஞ்செய்து, கப்பங்கட்ட விசைந்து விடைபெற்றுச் சென்றனர்.

மிக்க வீரமுள்ள இரகு, சந்தனமரங்களுள்ள அடிவாரங்களை யுடையவைகளும் தெற்குதிசையாகும் பெண்ணுக்குக் கொங்கைகள் போன்றவைகளுமான 'மலயம்' 'தர்த்துரம்' என்னும் மலைகளில் விருப்பப்படி வசித்துவிட்டு, சமுத்திரதிற்கு வெகு தூரத்திலுள்ள பூமாதேவியின் நிதம்பமெனப்பெற்ற 'ஸஹ்ய' பர்வதத்தையடைந்து ஆங்கிருந்து மேற்றிசை வேந்தரை வெற்றி கொள்ளும்பொருட்டுப் பெருத்த சேனைகளோடு அவ்வழியேசெல்லுந் தோற்றமானது பரசுராமனால் ஒதுக்கப்பட்ட சமுத்திரநீரானது மீண்டும் அந்த ஸஹ்ய மலையோடு நெருங்கி விட்டதுபோற் காணப்பட்டது. இரகுவின் சேனைகள் செல்வதாலுண்டான தூசுகள்பறந்து, பயத்தினால் ஆபரண மணியாத மலையாளப் பெண்களின்முன் நெற்றி மயிர்களில் சூர்ணத்திற்குப் பதிலாகப் படிந்தன. முரளாநதியின் காற்றினால் எழும்பிய தாழம்பூவின் தூசுகள்யாவும் அப்போர்வீரர்களின் கவசங்களிற் படிந்து முயற்சியின்றியே நறுமணங்கமழ்ந்தது. குதிரைகள் நடக்கும்போது "ஜேண"த்தாலுண்டான சத்தமானது ஆங்குள்ள பனங்காடுகளில் ஓலைகள் சலிக்கும் சத்தத்தை யொத்திருந்தது.

பேரீச்ச மரங்களின் அடியிற்கட்டிய யானைகள் மதநீரைப் பெருக்க வும், வண்டுகள் புன்னை மலர்களைவிட்டு வாசனை மிகுந்த அவற்றின் கதுப்புகளில் வந்து மொய்த்தன. இராமன் வேண்டுகோளுக்குப் பிறகு அவகாசமளித்த சமுத்திர ராஜனும் ஆங்குள்ள மேற்றிசை மன்னவர்கள் மூலமாய் இரகுவுக்கு காணிக்கையளித்தான். அவ் விடம் இரகுமன்னன், தனது வேழங்கள் முட்டிவிளையாடின "திரி கூட" மலையையே ஜயஸ்தம்பமாயமைத்து, ஆங்கிருந்து தத்துவ ஞானத்தினால் இந்திரியங்களை வெல்லும் ஞானியைப்போல, 'பார சீக' தேசத்தரசரை ஜெயிப்பதற்காகத் தரை மார்க்கமாகச் செல்ல லானான்.

தாமரை மலருக்கு ஹிதமான இளவெயிற்காந்தியை அகாலத் தில் மறைக்கும் மேகோதயம்போல இரகுராஜன், யவனஸ்திரீகளின் முகத்தாமரைகளில் மதுவாலுண்டான மதத்தைப் பொறுக்கவில்லை அப்பொழுது யவனவீரர்கள் குதிரைச் சேனைகளோடுவந்து இரகு வை எதிர்த்துப் போர்செய்யவே, அப்போரினின்று எழும்பிய தூசு கள் மேகமண்டல முழுதும் பரவி இருள் மூடிக்கொண்டமையால் போர் செய்யப்புகுந்த அரசர்கள் தத்தம் படைகளின் பேரிகை முழக்கங்களின் குறிப்பையுணர்ந்து அதனால் தம்படைகளை அறிய வேண்டியதாயிற்று.

காட்டீக்கள் சூழ்ந்துள்ள தேன் கூடுகளால் பூமி நிறைக்கப்பட் டதுபோல, இரகு புங்கவன், வீட்டிய ஈட்டியால் தாடிகள் மிகுந் துள்ள மேற்றிசை மன்னர்களின் படையினருடைய சிரசுகளைக் கொய்து களமுழுதும் பரப்பி விட்டனன். எஞ்சிய பகைவர் தலை ப்பாகைகளைக் கழற்றிவிட்டு இரகுவைச் சரணமடைந்தனர்; இரகு வும் அவர்களுக்கு அபயமளித்துத் திருப்பியனுப்பினான்; மகாத் மாக்களின் கோபம் வணக்கத்தினால் குறைகின்ற தன்றோ?

பின்னர் இரகுவின் போர் வீரர்கள் ஆங்குள்ள கொடி மிந்திரிக் காடுகளில் சிறந்த மிருகங்களின் தோல்களை விரித்து அமர்ந்து திரா ட்சை மதுவைப் பருகித் தாம் போர்புரிந்த சிரமத்தை யாற்றிக் கொண்டார்கள். பின்னர் சூரியன் தன் கிரணங்களால் நீரைக்கிர கிப்பது போன்று இரகுவும் வடதேசத்து மன்னர்களின் வாகை யைக் கிரகித்துக்கொள்ள விரும்பித் தம் படைகளோடு வடதிசை நோக்கிச் செல்லலானான்.

செல்லும் வழியிலுள்ள 'சிந்து' நதியின் அகன்ற மணற்றரை யில் இரகுவின் குதிரைப் படைகள் யாவும் புரண்டுப்புரண்டுத் தம்

சிரமத்தைப் போக்கிக்கொண்டு பிடரியிற் பற்றியிருந்த குங்குமச் சேறுகளை உதறின. ஆங்கும் யுத்தமுரா சறைவித்து * ஆங்குள்ள மன்னவர்களை யழித்த இரகுவின் பிரகாசமானது, அங்குள்ள 'ஹூண' ஸ்திரீகளின் கன்னங்களிற் சிவப்பு நிறங்காட்டா நின்றது. அது கண்ட "காம்போஜ" தேசத்தரசர்கள் இரகுவை எதிர்ப்பதற்கு அஞ்சி மரங்களை முறித்துக்கொண்டு பயந்தோடிய யானைகளோடு வந்து வணங்கி, ஏராளமான பொற்குவியல்களையும் குதிரைகளையும் காணிக்கையாகச் செலுத்தி நிற்க, அவைகளை ஏற்றுக்கொண்ட கர்வமற்ற காவலன், தன் குதிரைப் படைகளின் காற்குளம்புகளாற் கிளம்பிய காவிப் பொடிகளால் மலைச் சிகரங்களை உயரமாக்குவான் போலத் தம் படைகளோடு 'இமய' மலையின் மீதேறிச் சென்றனன்.

மலைகளின்மீதுள்ள பல குகைகளிற் படுத்திருப்பவைகளாகிய மிக்க பலம்பொருந்திய சிங்கங்கள் முகத்தை வளைத்துப் பார்த்தது. வரும் சேனைகளின் ஆரவாரங்களைக் கண்டுத் தமது அஞ்சாமையைத் தெரிவித்தது. காற்றானது 'பூர்ஜ' மரங்களில் 'மர்மர' சப்தங்களையுண்டு பண்ணிக்கொண்டும் காய்ந்தபுழை மூங்கில்களால் சத்தமிட்டுக் கொண்டும் கங்கைத் திவலைகளை வாரி யிறைத்துக்கொண்டும் வழியில்வந்த இரகுவைச் சேவித்தேகியது. வந்த படைகள் வழி நடந்த சிரமத்தை யாற்றிக்கொள்ளும் பொருட்டு ஆங்குள்ள புன்னை மர நிழல்களில் அமர்ந்திருக்குங்கால், சுற்றுப் பக்கங்களிலுள்ள கற்பாறைகளிற் படுத்திருந்த கஸ்தூரி மிருகங்களின் வாசனை யெங்கும் கமழ்ந்தது. தேவதாரு மரங்களிற் கட்டிய யானைகளின் கழுத்துச் சங்கிலிகளின் ஒளியையேற்ற பச்சிலைக் கொடிகள், இரகுவுக்கு எண்ணெய்யை எதிர்பாராத பற்பல தீபங்களாய் விளங்கின.

இவ்வாறு இரகு அவ்விடம் விட்டுச் சென்றதும், யானைகளின் கழுத்துச் சங்கிலிகளாலரைந்த பட்டைகளையுடைய தேவதாரு மரங்கள், அக்காட்டிலுள்ள வேடர்களுக்குக் கஜங்களின் உயரம் இவ்வளவென்பதைத் தெரிவித்தன. பிறகு இரகுபுங்கவன், இமய மலையிலுள்ள 'உத்ஸவ சங்கேதர்' என்னும் ஓர்வகைக் கணத்தவர்களோடு யுத்தஞ் செய்யத் தொடங்கினன்.

இருதிறப் படைகளும் யுத்தஞ் செய்யும்பொழுது உபயோகிக்

---

* இரகு ஹூணஸ்திரீகளின் கணவர்களைப்போரில் கொன்று விட்டதால், அம்மாதர்கள் தமது கதுப்புகளில் கைகளால் அடித்துக்கொள்ளவே அவர்கள் கதுப்புகள் சிவந்தன என்பது கருத்து.

கப்படும் எஃகாயுதங்கள் ஒன்றுக்கொன்று தாக்குண்டு தீப்பொரிகள் பரந்தன. நீண்ட யுத்தம் தொடங்கியபின் இரகு, தன் கூறிய அம்புகளால் அக்கணத்தார்களைச் செயித்தான். இச்செய்தி யறிந்த கின்னரர்கள் இரகுவின்மீது இன்னிசைகளைப் பாடா நின்றனர். பின்பு அக்கணங்களாற் காணிக்கையாக வரப்பெற்ற எண்ணிலா நிதியங்களையு மேற்ற இரகு புங்கவனுடைய பலம் இமவானுலும் இமவானுடைய பொருள் இரகுவாலும் கணித்து நிரூபிக்கப்பட்டன. பின்பு இரகு வேந்தன் அம்மலைக் கண் தனது நிலைபெற்ற கீர்த்தியை நாட்டி, இராவணனசைத்த பர்வதத்தை அவமானஞ் செய்வதுபோல, மலையைவிட்டுப் படைகளோடு கீழே இறங்கலாயினன்.

இரகு, வழியிலுள்ள 'லோகிதீ' நதியைக் கடந்ததும், சேனைகள் ஆங்குள்ள அகில் மரங்களில் யானைகளைக் கட்டினதால், அவைகள், அம்மரங்களைப் பிடுங்கிக்கொண்டு ஓடின. அதனுல் 'ப்ராக் ஜோதிஷ்' நகரத்தரசன் பயந்து, மழையின்றியே 'துர்த்தினம்' வந்ததோ வென்று சொல்லும்படி இரகுவின் தேர்கள் செல்லுவதாலுண்டான புழுதியையே பொறுக்காததால், அவன் இரகுவின் சேனையை எவ்வாறு எதிர்த்து நிற்பான்? 'காமரூப' தேசத்தரசன், இந்திரனிலும் மிகுந்த இரகுவைக் கண்டவுடன் அடிபணிந்து ஏராளமான யானைப் பரிசுகளையும் இரத்தினங்களையும் கொடுத்து, இரகுவின் பாதமலர்களைப் பூசித்து நின்ருன். அவ்வேழங்கள் மதநீரைப் பெருகவிடுகின்றவைகளாயும், பிறமன்னவரைச் செயிப்பதற்குச் சாதனங்களாயும் இருந்தன.

இவ்வாறு ஜெயசீலனுன இரகு, திக்குவிஜயஞ் செய்துவிட்டு, தேர்கள் செல்லுவதனுலுண்டான தூசுகளைக் குடைகளற்ற அரசர்களின் கிரீடங்களிலப்பச்செய்து, தன்னகரத்திற்குத் திரும்பிவந்து, பொருள் முழுவதையும் தக்ஷிணையாகவுடைய "விசுவஜித்" என்னும் ஓர் அரிய யாகத்தைச் செய்து முடித்தான். நல்லோர் பொருளைச் சேர்ப்பது மேகங்களைப்போலப் பிறரிடம் கொடுப்பதற்கேயாம். யாகம் முடிந்ததும் இரகு புங்கவன், மந்திரிகளோடு சேர்ந்து வந்திருந்த மன்னவர்களுக்கெல்லாம் மிகுந்த மரியாதை செய்து, கிரமப்படி அவரவர் தேசத்திற்குச் செல்லுமாறு விடைகொடுத்தனுப்பினுன். இரகு செய்த மரியாதையினுல் அவ்வரசர்கள் தாம் தோல்வியுற்ற துக்கத்தையும் மறந்து விட்டனர்.

அவ்வரசர்கள் யாகத்திற்கு வந்து வெகு நாட்களானதால் அவர்களுடைய அந்தப்புர ஸ்திரீகள் மிகவும் காதல் கொண்டிருந்

தனர். அவ்வேந்தர்கள், தத்தம் தேசத்திற்குத் திரும்பிச் செல்லு கையில், கொடி, குலிசம் குடை முதலிய ரேகைகளையுடையனவும் அருளால் மட்டும் பெறத் தக்கவைகளுமாகிய இரகு சக்கரவர்த்தி யின் பாதங்களை நமஸ்கரித்தனர். அப்பொழுது அன்னோர் சிரசி லுள்ள மாலையிலிருந்து தேனும் மலரிதழ்களும் இரகுவின் பாதங் களில் நழுவி விழுந்தமையால், அவை வெகுப்பாகக் காணப்பட்டன.

(நான்காவது ஸர்க்கம் முடிந்தது)

By: **M. M. Narayanasawmy Aiyer,**
Mudikondan, P. O.
(*via*) ***Nannilam.***

ஶ்ரீஜிநாய நமஃ

ப்ரஶ்நோத்தர மாணிக்யமாலா

ப்ரஸ்னோத்தர மாணிக்யமாலா.

(முன்தொடர்ச்சி-புத்தகம்-6, சஞ்சிகை-6, பக்கம்-132.)

ஸம்யக்தர்ஶநவர்ணநம்.

25. ஹோ ஜ்ஞாநஸாகர, ஸம்யக்தர்ஶநஸ்ய கிம் லக்ஷணம்?

போ ஞானசாகர சம்யக்தரிசனஸ்யகிம் லக்ஷணம்?

ஓ ஞானசாகரனே, சம்யக்தரிசனத்தினுடைய லக்ஷண மென்ன.

நாஸ்தி சார்ஹத்பரோ தேவோ தர்மோ நாஸ்தி தயாம் விநா
தப: நாஸ்தி ச நைர்க்ரந்த்யாத் ஏதத் ஸம்யக்த்வ லக்ஷணம்

நாஸ்திசார்கத்பரோ தேவோதர்மோநாஸ்தி தயாம்வினா
தபோநாஸ்திச நைக்ரரத்யா தேதத்சம்யக்த்வ லக்ஷணம்.

(இதன் பொருள்) அருகத்பரமேஸ்வரனை விடவேறே தேவனில்லை தயை யை விடவேறே தர்மமில்லை, நிக்ரந்த முனிகளைவிட மேலான தபசில்லை என்று திடமான நம்பிக்கை வைப்பதே சம்யக் தரிசனம்.

26. ஹோ முநிநாத ஸம்யக்தர்ஶந யுக்தஸ்ய குணா: கே?

போ முனிநாத சம்யக்தர்சன யுக்தச்பகுணஹ கே?

ஓ யதி நாதனே நர்காக்ஷியுள்ளவனுடைய குணங்கள் யாவை.

സംവെഗൊ നിവ്വെഗൊ നിംദാ ഗരഹാ ഉവസമൊ ഭത്തിഃ
അനുകംപാ വാത്സല്യം ഗുണാസ്തു സമ്യക്ത്വ യുക്തസ്യ

சம்வேகோநிர்வேகோ நிந்தாகர்காத தோபசமபக்திஹ
அனுகம்பாவாத்சல்யம் குணாஸ்து சம்யக்த்வயுக்தஸ்ய.

(இ-ள்.) സംവെഗഃ (தர்மம், தர்மத்தினுடைய பிரயோஜனம் இதுகளில் ப்ரீதி,) നിവ്വെഗ (சம்சாரத்தி லிருந்தபோதிலும் வைராக்ய பாவத்தோ டிருப்பது) അനിംദെ (இதரரை தூஷிக்காமலிருப்பது ഗഹ്ഹാ ஆத்மநிந்தனை உவம്ശമഭക്തിഃ க்ரோத, மான, மாயா, லோப, என்கிற கஷாயங்களை சாந்தம் செய்து ஸ்ரீ ஜிநேஸ்வரனிடத்தில் பக்தி பாவசனுயிருப்பது, അനുകംപെ (ஜீவதயை) വാത്സല്യം (சொந்த மக்களைப் போல ஸ்வதர்ம பந்துக்களிடத்தில் ப்ரீதியாயிருப்பது இந்த எழு குணங்களுடன் கூடினவர்கள் சம்யக் திருஷ்டிகள்.

27. ഹൊ ബ്രഹ്മസ്വരൂപ സമ്യഗ്ദശ്ശനസ്യ കിംഫലം ?
போ ப்ரம்ஹஸ்வரூப சம்யக்தர்சனஸ்யகிம் பலம் ?

ஓ பிரம்மஸ்வருபனே! நற்காக்ஷியினுடைய பலம் என்ன.

സമ്മാഇട്ഠീജീവൊ ദുഗ്ഗഇഹെ ദുണബന്ധയെകമ്മം
ജംബഹുഭവെസുബദ്ധം ദുക്കമ്മംതം വിണാസയദി.

சம்மாஇட்டீஜீவோ துக்கயிஹெதுண பத்தயேகம்மம்
ஜம்பகூபவே சுபத்தம் துக்கம்மம் தம்பிணுசயதி.

(இ-ள்.) சம்யக் திருஷ்டிகளுக்கு நரகம், திர்யக், முதலான கெட்ட கெதிகளினுடைய பந்த ஆகுவதில்லை பூர்வத்தில் அனேக ஜன்மங்களில் அடைந்த கெட்ட கர்மங்களும் நாச மடைகின்றது.

28. ഹൊഗുരു ദെവ സമ്യക്ത്വസ്യാതി ചാരാഃ കെ ?
போ குருதேவ ஸம்யக்த்வஸ்யாதி சாராஹ கெ ?

குருவர்யனே சம்யக்தரிசனத்துக்கு அதிகாரங்கள் எது.

ദഹകംഖാ വംചഫലാവംച വിസഗാഇ വംചകുസുമാഇ
മഹുമജ്ജയംസവീരഇ അതിചാരാ ഹൊംതിസംപത്തെ

தககந்த பஞ்சபலாபஞ்ச விசகாஇ பஞ்சகுசுமாயி
மஹாமஜ்ஜயந்திஸவீரஇ அதிசாரா ஹொந்திசம்பத்தே.

(இ-ள்.) பத்து கிழங்குகள், வெங்காயம், வெள்ளைபூண்டு, முள்ளங்கி, உருளைகிழங்கு, கருணைகிழங்கு, வள்ளிகிழங்கு, சேர்ப்பங்கிழங்கு, வாழைக்கிழங்கு, வெத்திலை வள்ளிகிழங்கு, பனங்கிழங்கு, அஞ்சுவித பூக்கள், வாழைபூ, அவத்திபூ, முருங்கைபூ, வேப்பம்பூ, பாரிஜாதபூ, பஞ்சோதும்பரபழம், ஆல், அத்தி, கல்லால், கல்லத்தி, அரசு, இதுகளை சம்யக்திருஷ்டிகள் தின்னக் கூடாது.

29. 𑌭𑍋 𑌯𑌤𑍀𑌨𑍍𑌦𑍍𑌰 𑌸𑌮𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌯𑍋𑌗𑍍𑌯𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑌃 𑌕𑌃 ?

போ யதீந்த்ர சம்யக்த்வயோக்யஹ புருஷஹ கஹ ?

ஓ யதீந்த்ரனே

சம்யக்த்வத்துக்கு யோக்யமான புருஷன் யார்.

𑌭𑌾𑌷𑌾𑌬𑍁𑌦𑍍𑌧𑌿 𑌵𑌿𑌵𑍇𑌕𑌵𑌾𑌕𑍍𑌯 𑌕𑍁𑌶𑌲𑌃 𑌶𑌙𑍍𑌕𑌾𑌦𑌿 𑌦𑍋𑌷𑌾𑌦𑌿𑌗𑍋
𑌗𑌮𑍍𑌭𑍀𑌰𑌃 𑌪𑍍𑌰𑌶𑌮𑌶𑍍𑌰𑌿𑌯𑌾 𑌪𑌰𑌿𑌗𑌤𑍋 𑌵𑌶𑍍𑌯𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑍋 𑌧𑍈𑌰𑍍𑌯𑌵𑌾𑌨𑍍
𑌪𑍍𑌰𑌾𑌵𑍀𑌣𑍍𑌯𑌂 𑌯𑌤𑌿𑌨𑌿𑌶𑍍𑌚𑌯𑍇 𑌵𑍍𑌯𑌵𑌹𑍃𑌤𑍌 𑌭𑌕𑍍𑌤𑌿𑌶𑍍𑌚 𑌦𑍇𑌵𑍇 𑌗𑍁𑌰𑍌
𑌵𑌾𑌤𑍍𑌸𑌲𑍍𑌯𑌾𑌦𑌿 𑌗𑍁𑌣𑍈𑌰𑌲𑌙𑍍𑌕𑍃𑌤𑌵𑌪𑍁𑌃 𑌸𑌮𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌯𑍋𑌗𑍍𑌯𑍋 𑌭𑌵𑍇𑌤𑍍.

பாஷாபுத்தி விவேகவாக்ய குசலஹ சங்காதிதோஷாதிகோ
கம்பீரப்ராசமஸ்ரியா பரிகதோவஸ்யேந்திரியோ தைர்யவான்
ப்ராவீண்யம் யதிநிச்சயே வ்யவஹ்ருதௌ பக்திச்ச தேவேகுரு
வாசித்யாதி குணைரலங்கிர்தவபுஹ சம்யக்த்வ யோக்யோபவேது.

(இ-ள்.) உண்மையுரைப்போன், புத்திவந்தன், விவேகி, வாக்சாதுர்யமுள்ளவன், சங்காதி தோஷரஹிதன், கம்பீர புருஷன், சாந்தஸ்வபாவன், இந்திரியங்களை தன் ஆதீனமாக்கிகொண்டவன், தைர்யசாலி, வ்யவகாரம், நிச்சயம், இதுகளை தெரிந்தவன் அரசந்ர் நிக்ரந்தர், இவர்களிடத்தில் பக்தியுள்ளவன் இப்பேர்பட்ட வேரே குணங்களிஞலும் அலங்கரிக்கப்பட்டவன் புருஷச்ரேஷ்டன் சம்யக்த்வத்தை பரிபாலிப்பதர்க்கு அவன் யோக்கியனுவான்,

30. 𑌭𑍋 𑌗𑍁𑌰𑍁𑌦𑍇𑌵 𑌸𑌮𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌸𑍍𑌯 𑌕𑌿𑌂 𑌮𑌾𑌹𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑌂 ?

போ குருதேவ சம்யக்த்வஸ்யகிம் மாஹாத்ம்யம் ?

ஓ. குருதேவனே சம்யக்த்வத்தினுடைய மாஹாத்மியம் எவ்வளவு இருக்கிறது.

𑌤𑌾𑌵𑌦𑍍𑌦𑍀𑌰𑍍𑌘𑍋𑌭𑌵𑌾𑌂 𑌦𑍇𑌹𑌿𑌷𑍍𑌠𑌾𑌵𑌜𑍍𑌞𑍋 𑌪𑌰𑌂𑌪𑌰𑌾
𑌤𑌾𑌵𑌚𑍍𑌛𑌤𑍍𑌰𑍁𑌃 𑌪𑌾𑌪𑌿𑌯𑌾𑌵𑌨𑍍𑌨 𑌸𑌤𑌾𑌂 𑌸𑌮𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌸𑌂𑌭𑌵𑌃

தாவத்பீமோபவாம் போதிஸ்தாவஜ்ஜன்ம பரம்பரா
தாவத்துக்காணி தியாவன்ன சதாம்சம்யக்த்வ சம்பவஹ.

(இ-ள்.) சத்புருஷர்களுக்கு சம்யக்த்வமானது உண்டாகிறவரைக்கு மாத்திரம் சம்சார சமுத்ரமானது பயங்கரமாக தோன்றும். ஆனால் ஜன்ம மரண துக்கங்கள் சம்யக்த்வத்தினுடைய பிராப்தியாகிறவரைக்கு மிருக்கும் (சம்யக்த்வமானது உண்டானபிறகு ஜனன மரணாதி துக்கங்கள் தீவ்ரமாய் நஷ்டமாகிறதென்பது தாத்பர்யம்,

31. ஸம்ம்த்துரதாந வரம்ஹிரத்நம்
ஸம்ம்த்துமித்தாந வரம்ஹிமித்தம்
ஸம்ம்த்துபம்யூந வரோஸிபம்யூ:
ஸம்ம்த்துலாஹாந வரோஹிலாஹ:

சம்யக்த்வரத்னன்ன பரம்ஹிரத்னம்
சம்யக்த்வமித்ரான்ன பரம்ஹிமித்ரம்
சம்யக்த்வபந்துந்ந பரோஸ்திபந்துஹ
சம்யக்த்வலாபாந்ந பரோசஹிலாபஹ.

(இ-ள்.) சம்யக்த்வத்தைவிட மேலான ரத்னமில்லை அதைவிட வேறே மித்ரனுமில்லை பந்துக்களுமில்லை இன்னும் சம்யக்த்வத்தை காட்டிலும் மேலானலாபமில்லை.

32. ஹோ குருதேவ தஸணப்ரஷ்டோஜீவ: ஸித்யதிவாந?
போ குருதேவ தர்சனப்ரஷ்டோஜீவஹ சித்யதிவாந?

ஓ. குருதேவனே சம்யக்த்வத்தி னின்றும் பிரஷ்டான ஜீவன் முக்தியை அடையக்கூடுமோ.

தம்ஸணபட்டாபட்டா தம்ஸணபட்டஸ்ஸ ணத்தி ணிவ்வாணம்
ஸிஜ்ஜந்திசரியபட்டா தம்ஸணபட்டாண ஸிஜ்ஜந்தி

தம்சண பட்டாபட்டா தம்சண பட்டஸ்ஸணத்தி ணிவ்வாணம்
சிச்சதிசரிய்யபடா தம்சண பட்டாண சிச்சந்தி.

(இ-ள்.) சம்யக்தரிசனத்தினின்றும் ப்ரஷ்டனானவன் அவனுக்கு முக்தியில்லை சாரித்திரத்தினின்றும் பிரஷ்டனானாலும் (காலாந்தரத்தில்) ஞான சகிதனாகி சாரித்ரத்தை பாலித்து முக்தியை அடையக்கூடும், ஆனால், மித்யாத்வனான அபவ்யனுக்கு முக்தி இல்லை.

33. 𑌭𑍋 𑌗𑍁𑌰𑍋 𑌸𑌂𑌸𑌾𑌰𑍇 𑌪𑍇𑌯𑌂 𑌕𑌿𑌂?

போ குரோ சம்சாரே பீயம்கிம்?

வாரும் ஸ்வாமி இந்த சம்சாரத்தில் பானம் செய்வதர்க்கே யோக்கியமானது எது?

𑌅𑌤𑍁𑌲𑌸𑍁𑌖𑌨𑌿𑌧𑌾𑌨𑌂 𑌸𑌰𑍍𑌵𑌕𑌲𑍍𑌯𑌾𑌣𑌬𑍀𑌜𑌂
𑌜𑌨𑌨𑌜𑌲𑌧𑌿𑌪𑍋𑌤𑌂 𑌭𑌵𑍍𑌯𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑍈𑌕𑌪𑌾𑌤𑍍𑌰𑌂
𑌦𑍁𑌰𑌿𑌤𑌤𑌰𑍁𑌕𑍁𑌠𑌾𑌰𑌂 𑌪𑍁𑌣𑍍𑌯𑌤𑍀𑌰𑍍𑌥𑌪𑍍𑌰𑌧𑌾𑌨𑌂
𑌪𑌿𑌬𑌤𑍁 𑌜𑌿𑌤𑌵𑌿𑌪𑌕𑍍𑌷𑌂 𑌦𑌰𑍍𑌶𑌨𑌾𑌖𑍍𑌯𑌂 𑌸𑍁𑌧𑌾𑌮𑍍𑌬𑍁.

அதுலசுகநிதானம் சர்வகல்யாணபீஜம்
ஜனனசலதிபோதம் பவ்யசத்வைகபாத்ரம்
துரிததருகுடாரம் புண்யதீர்த்தப்ரதானம்
பிபதுஜிதவிபக்ஷம் தர்சனக்யம் சுதாம்பு.

(இ-ள்.) அப்ரதிமமான சுகத்துக்கு பாண்டாகாரம் போன்றதும் பஞ்ச கல்யாணத்திர்க்கு பீஜம் போன்றதாயும், ஜனனமரணமென்கிற சமுத்திரத்தினின்றும் தாண்டுவதர்க்கே கப்பல்போன்றதாயும், பவ்யப்ராணிகளை தவிர வேறே ஸ்தளத்தில் இல்லாமலானதாயும், பாவமென்கிற வ்ருக்ஷத்திர்க்கு கோடாலிபோன்றதாயும் எல்லா புண்யங்களில் ச்ரேஷ்டமானதாகவும், மித்யாத்வத்தை கெடுக்ககூடிய சம்யக்தரிசன மென்கிற அம்ரதத்தை பானம் செய்ய வேண்டும்,

34. 𑌸𑌮𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌭𑍂𑌷𑌣𑌾𑌨𑍍𑌨𑌾𑌸𑍍𑌤𑌿 𑌭𑍂𑌷𑌣𑌂 𑌭𑍁𑌵𑌨𑌤𑍍𑌰𑌯𑍇.
𑌧𑌨𑌂 𑌸𑌰𑍍𑌵𑌧𑌨𑍇𑌭𑍍𑌯𑍋𑌽𑌪𑌿 𑌸𑌮𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌧𑌨𑌮𑍁𑌤𑍍𑌤𑌮𑌂

சம்யக்த்வ பூஷணான்னஸ்தி பூஷணம் புவனத்ரயெ
தனம் சர்வதனேப்யோபி சம்யக்த்வதன முத்தமம்.

(இ-ள்.) மூன்று லோகங்களில் சம்யக்தரிசனமென்கிற ஆபரணத்தை விட வேறே ஆபரணமில்லை அதாவது மூன்று லோகத்திலுமில்லை எல்லா விதமான தனத்திர்க்குள் சம்யக்தர்சனமே மேலானது.

இன்னும் வரும்.

விருதூர். திரு. அப்பாண்டை நயினர்
அனந்தபுரம் ஸ்கூல்டீச்சர்,
ஜாகீர் ஆரணி.

ஸ்ரீ-வித்யா-வித்யே.

ஸ்ரீ ஆத்மசிந்தனே

(முன்தொடர்ச்சி-புதகம்-6. சஞ்சிகை-6. பக்கம்- 35)

முன்னே சம்சாரத்திற்கு மிஞ்சின சத்ருவில்லை என சொல்லப்பட்டது சம்சாரத்திற்குள் இருக்கிற சுக துக்கங்களுடைய ப்ரமானத்தை சொல்வது சுலபமல்ல, உதாரணையினாலே தவிர அதை ப்ராசொன்னால் மூட ஜனங்களுடைய மனதில், நன்றாய் படிவதில்லை ஆகையினாலே, உதாரணத்தினால் சொல்லுகிறேன்.

ஒரு வழிபோக்கன் இருக்கிறான், அவனுக்கு போகபோக தெய்வானுகூலமாய் ஒரு பயங்கரமான காடு அகப்பட்டது அந்த காட்டில், சிம்மம், புலி, கரடி, முதலான ஹிம்சப்ராணிகள் கும்பல் கும்பலாய் திரிந்துக் கொண்டிருந்தது. அவ்விடத்தில் மனுஷ்யர்களுடைய நாத்தம்கூட கிடையாது. அப்பேர்பட்ட காட்டில் அவன் பயந்துபயந்து போகையில், ஒரு பெரிய மதம்பிடித்த யானையானது தும்பிக்கையை மேலே தூக்கிக்கொண்டு தன்னை கொல்லவேணுமென்கிற இச்சையினாலே தன் பின்னால் வருவதைபார்த்து அந்த வழி போக்கன் தன்னுடைய ஜீவனை காப்பாற்றி கொள்வதற்கே வழிவிட்டு அடவிக்குள் ஓடதொடங்கினான், ஆனால் அது புதுவழியானதினாலும், யானையினுடைய பயங்கரத்தினாலும் தீவ்ரமாய் ஓட வேண்டியிருந்ததினாலே, முன்னே என்ன இருக்கிறதென்கிற லட்சியமில்லாமல் ஓடுகிறபொழுது ஒரு பெரிய பள்ளத்தில் வீழ்ந்தான்.

அதனுடைய கரையின்மேலிருக்கிற ஆலமரத்தினுடைய ஒரு விழுது கைக்கே தென்பட்டது, அதை பிடித்துக்கொண்டு சுத்தி பார்க்கையில், தான் பிடித்திருக்கிற விழுதின் நுனியில், ப்ரத்யக்ஷ யமனுடைய காலதண்டம்போல ஒரு பெரிய சர்ப்பத்தை பார்த்தான். மேலே இரண்டு எலிகள் தன்கையில் அகப்பட்டுகொண்டிருக்கிற விழுதின் அடியை கடிக்கிறது தன்னைசுற்றி நாலுபக்கமும் நாலுசர்ப்பம் தன்னுடைய சரீரத்தின்மேல் வருவதைபோல் தோன்றுகிறது இதர்க்குள் அந்த யானையானது, தன்கைக்கு அகப்படாமல் போய்விட்டானென்று தெரிந்து அதிகமான கோபத்தினாலே தான் பிடித்துக்கொண்ட விழுதுக்கு மூலமான ஆலமரத்தையே கிழித்து ஒடிக்கவேண்டுமென்று தும்பிக்கையினால் மேல்கிளையை கெட்டியாக பிடித்து ஆட்டத் தொடங்கிற்று. அதனால் அதே கிளை

யில் தனக்குமேல் கூண்டு கட்டிகொண்டு இருக்கிற தேன் ஈக்கள், அந்த கூண்டைவிட்டு, அந்த வழிபோக்கனுடைய திரேகத்தை சுத்தி ஒரு மிக்க "கொய், கொய்" என்று உக்ரமாய் கடிக்க ஆரம்பித்தது அதனாலே அவனுக்கு ரம்பவும் கஷ்டமாய் ஸ்வல்ப மேல் முகனாகையில், அந்த தேன்கூண்டி நின்றும், ஒரு தேன்துளி அவன் வாயில் விழுந்தது. இதனாலேயே, மூர்க்கனான வழிபோக்கன், தனக்குண்டாயிருக்கும் தொந்தரவுகளை ஜீவனுடைய மேலேவந்த பயங்கர சங்கடத்தை கொஞ்சமாவது லட்சியம் செய்யாமல் இன்னும் ஒரு தேன்துளி எப்போது விழபோகுதென்று ஆசையினாலே முகத்தை மேலாக செய்து நின்றுக்கொண்டிருந்தான். ஒரு சிறுதேன் துளிக்காக தனக்கு உண்டான எல்லா துக்க பயங்களை மரந்துவிட்டான். சாராம்சமாவது—இதே ரீதியாக சம்சார ப்ராணிகளுக்கு சுக துக்கங்கள் ப்ராப்தமாகிறது. வழிவிட்டு மாரியதே பாபவழி, வழிபோக்கனே சம்சாரப்ராணி, தெரித்துவந்த யானையே யமன், ஆலமரத்தினுடைய விழுதே ப்ராணியினுடைய ஆயுஷ்யம், ஆலமரம் கிளைகளே சம்சாரம் ஆலம் விழுதின் நுனியில் இருக்கிற சர்ப்பமே நரகம், விழுதை கடிப்பதென்கிற க்ரஷ்ணபக்ஷ சுக்லபக்ஷ எலிகள் க்ரோத, மான, மாய, லோப, கஷாயங்களை நாலு பாம்புகள் தேன்ஈ என்பதே, வியாதிகள், தேன் சிறு துளியே விஷய சுகம்.

ஹே மகாசயர்களே! மேல் சொல்லிய திருஷ்டாந்தத்தில் துக்கம் எவ்வளவு அதிகமென்றும், சுகம் எவ்வளவு அர்ப்பமென்றும் விளங்குகிறது இதனால் முன்னோர்கள் சம்சாரத்தை த்யாகம்செய்துவிட்டு ஆத்மசிந்தனை செய்து மோக்ஷ மடைந்தார்கள் இனி த்யான லக்ஷணத்தை சிறிதுரைக்கிறேன்.

மன, வசன, காய, வ்யாபாரங்களி நின்றும் பாபபுண்யங்கள் பந்தமாகிறதாகையினாலே "மனயேவ மனுஷ்யாணும் காரணம் பந்த மோக்ஷ யோஹோ" என்கிற வசநானு சாரமாக, மனோவ்யாபாரமே பாபபுண்யங்களுடைய, பந்தத்திர்க்கும், விமோசனத்திர்க்கும், முக்கிய காரணமாய் இருக்கிறது. ஒரு மனுஷ்யன் தன்னுடைய சத்ருவை கொல்ல வேண்டுமென்று மனதில் சிந்திப்பதினாலேயே, பாபபந்தமாகிறது. இன்னொருவன், துக்கிதப்ராணிகளை காப்பாற்ற வேணுமென்று சிந்திப்பதினாலே, புண்ய பந்தமாகிறது. இப்பேர்பட்ட மனசை ஒரே விஷயத்தில் ஸ்திரம் செய்வதற்கே த்யானமென்று

பெயர் இந்தத்யானமானது, சத்தியானமென்றும், அசத்தியான மென இருவகையுண்டு.

ஆத்மனுக்கு பாபசம்பந்தத்தை உண்டு பண்ணுகிற விஷயத்தை பரிபாவிப்பது அசத்தியானமென்பது. இந்த அசத்தியான மானது, ஆர்த்தத்தியானமென்றும், ரௌத்ரத்தியானமென்றும் இரண்டு ப்ரகாரமாகிறது. தனக்கு இஷ்டமில்லாத வஸ்துக்கள், சம்யோகமானல், ரம்பரம்ப, அந்த வஸ்துக்களுடைய வியோக சிந்தனை யை செய்வதோ. தனக்கு இஷ்டமான வஸ்துக்கள் வியோகமானல், அந்த வஸ்துக்களுடைய சம்யோக சிந்தனையை செய்வதோ. ரோகத்தினலே வேதனைகள் ப்ராப்தமானல் அந்த வேதனையை சிந்திப்பதோ. உத்தரஜன்மத்தில் விஷய சுகமுண்டாக வேணுமென்று சிந்திப்பதோ அது, ஆர்த்தத்தியானமாகிறது. பெரிய பெரிய ஹிம்சையை சிந்தித்து ஆனந்தப்படுவதோ, பொய்சொல்லி ஆனந்தப் படுவதோ, திருடை சிந்தித்து ஆனந்தப்படுவதோ, போகோப போக சாமக்ரிகளை சம்ரக்ஷிக்க வேண்டுமென்று சிந்தித்து ஆனந்தப் படுவதோ, அது, ரௌத்ரத்யானமாகிறது. இது முதலான துர்த்தி யானத்தினலே ஆத்மனுக்கு அதிகமான பாபபந்தமாகி, இஹபரங் களில் அபாரமான துக்க முண்டாகிறது.

ஆத்மனுக்கு புண்ய சம்பந்தத்தை அதவா கர்ம விமோசனை யை உண்டுபண்ணும் விஷயத்தை சிந்திப்பது சத்தியானமாகிறது. இந்தத்தியானத்தில், தர்மத்தியானமென்றும், சுக்லத்யானமென் றும் இரண்டு பேதமிருக்கிறது. சுக்லத்யானமானது, க்ரகஸ்தருக்கு சாத்தியமாவதில்லை ஆகையினலே அதை இங்கேசொல்லவில்லை. தர் மத்தியானமானது, க்ரகஸ்தருக்கு சாத்யமாக கூடியதாகையினலே யும், முக்ய கர்த்தவ்யமாய் இருப்பதினலும், ஸ்வல்பமாய் சொல்லு கிறேன். இந்த த்யானத்தில், சுபத்யான, சுத்தத்யான, என இரண்டு விதமாய் இருக்கிறது. சர்வஞ்ஞனுடைய உபதேசத்தை சிந்திப் பதும், ஸ்வதர்மத்திற்கு சம்பவிக்ககூடியதான அபாயத்தை சிந்திப் பதும், கர்ம பரியாகங்களை சிந்திப்பதும், லோகாகாரத்தை சிந்திப் பதும், சுவாமியினுடைய பவித்ரமான குணங்களை நினைப்பதும், உத் தமமான பல புஷ்பாதிகளினலே பகவந்தனை பூஜிக்கவேண்டுமென்று சிந்திப்பது. துக்கப்படுகிற ப்ராணிகளுடைய துக்கத்தை போக்க டிக்க வேண்டுமென்று சிந்திப்பதும், சுபத்யானமாகிறது, இதில், இன்னும் பதஸ்த, பிண்டஸ்த, முதலான அநேக பேதங்களுண்டு,

விஸ்தாரமாகும் ஆகலால் எழுதவில்லை. இந்த சுபத்பானத்தினை, தியானிப்பவருக்கு இகபரங்களில, புத்ர, களத்ர, தன, தான்ப, முதலான சகல சௌபாக்யங்களை உண்டு பண்ணுகிற புண்யம், ப்ராப்தமாகிறது.

(இன்னும் வரும்.)

விருதூர். திரு அப்பாண்டை நயினர்.
அனந்தபுறம் ஸ்கூல் டீச்சர்,
ஜாகீர் ஆரணி.

இரகஸ்யபுரி மர்மம்.

அத்தியாயம் 3.

(முன்தொடர்ச்சி புத்தகம்-6, சஞ்சிகை-6, பக்கம் 144)

கள்வர் குகையில் அம்புஜவல்லி

பார்த்தாள் அம்புஜம். நம்முடைய பிதாவினுடைய கடிதத்தில் இக்கள்வர்கள் கூட்டத்திலுள்ள இவனுக்கு என்ன சம்பந்தம். மேலும் அந்த விஷயமிருப்பது அநங்கனையும் என்னையும் தவிர வேறு யாருக்குமே தெரியாதே. அப்படியிருக்க இவன் எவ்வாறறிந்தான் என்று இவ்வாறெல்லாம் மனதில் எண்ணி இதில் ஏதோ மர்மமிருக்கவேண்டுமென்று மனதைத் திடப்படுத்திக்கொண்டு.

"அய்யா! நீ வீர்யாவராயிருப்பினும் சரி உம்மை ஆண்மகனென்று எண்ண இடமில்லை. ஒருபெண்பிள்ளை—அதிலேயும் மணமாகாதபெண்—என்முன் வந்துநின்று ஏதேதோ வாய்வீச்சு வீசுகிறீரே உம்மிடத்திலா ஆண்மையிருக்கிறது. பெண்பிள்ளை யிடத்தில் கத்தியை வைத்துக்கொண்டு குத்திவிடுவேன் என்று பலவந்தப்படுத்துகின்றீரே. நல்ல ஆண்பிள்ளை. இதுதான் ஆண்பிள்ளைக்கழகோ? நீர்யார்? உமதுபெயர் என்ன?

மனிதன்:—ஏன் கட்டாயம் சொல்லித்தான் தீரவேண்டுமோ? இல்லையேல்?

அம்புஜம்:—நானும் சொல்லமாட்டேன்.

மனிதன்:—ஓஹோ! அப்படியா! சரி! இதோ சொல்லுகிறேன் என்னை பக்காத்திருட்டுத் தலைவன் கொங்கணவீரன் என்பார்கள்.

அம்புஜம்:—[கொஞ்சம் பீதிகொண்டாள். உடனே தைரியத்தைக் கைவிடாமல்] ஓஹோ! அப்படியா! புகழ்பெற்ற கொங்கணவ வீரன் நீர்தாமோ பேஷ் சபாஷ் நல்ல பட்டம் உமது தொழில் இவ்வாறு என்னைப்போல் உள்ள பெண்களைக் கைப்பற்றுதல்தானே?

மனிதன் :—இதற்கும் நான் உத்தரம் சொல்ல வேண்டுமோ? சரி என்னுடைய தொழில் கொள்ளை யடிப்பதொன்றே. இப்பொழுது உன்னை சில கார்யார்த்தமாக இவ்விடத்தில் கொண்டுவந்து வைத்தால் நலமாயிருக்கும் என்று பாணன் என்னும் தனவந்தர் சொன்னர். அவர் எங்களுக்கு மிகவும் திரவியம் தருவதாகச் சொன்னர். ஆகையால் பெண்மணே உன்னை அன்று அடியோடு எடுத்துவரச் சொன்னன்.

அம்புஜம் :—(பாணன் என்ற பெயரைக் கேட்ட மாத்திரத்திலே திடுக்கிட்டெழுந்தாள். நம் வீட்டுக் கணக்குப்பிள்ளை நம்மை அகஸ்மாத்தாய்த் தூக்கிவந்து நம்மிடத்தில் கடிதத்தையும் கேட்கிறான் வரட்டும் பார்ப்போம். பின்னும் பார்ப்போம் என்று நினைத்து); அய்யா! கொங்கணவீரரே! ஆமாம் நீர் இப்போது கடிதம் ஒன்று கேட்டீரல்லவா. அதை அவர் உம்மைக்கொண்டு கேட்கச் சொன்னரோ?

மனிதன் :--அவரொன்றும் கேட்கச் சொல்லவில்லை விஷயம் அதுதான் என்று தெரிந்து நானகவே கேட்டேன்.

அம்புஜம் :--ஆனல் நீர்செல்லும். உம்மிடத்தில் யான் சொல்ல வேண்டிய தவசியமில்லை செல்லலாம்.

வந்த மனிதன் இவளது தௌஷ்டீகமான வார்த்தைகளைக் கண்டு மனதிற் கொஞ்சம் அச்சமுற்று பாணன் நம்மை யாது செய்வானே இப்பெண் அவனிடத்தில் நடந்த காரியத்தைச் சொல்லிவிட்டால் என்ன செய்கிறது என்று திபங்கினவனுப் கதவைத் தாளிட்டு விட்டுச் சென்றுன். அம்புஜம் எழுந்திருந்து பல்விளக்கி முகங்கழுவி வந்தனை வழிபாடுகள் செய்து ஆகாரம்.

கிற்க அவ்வீட்டிற்கு மணி பதினென்றிருக்கும் நாலைந்து மனிதர்கள் ஓர் மனிதனைத் தூக்கிக்கொண்டு வந்தார்கள். கொண்டுவந்தவர்கள் தாங்கள் தூக்கிவந்த மனிதனை அம்புஜத்தை யடைத்திருந்த அரைக்கட்டுத்தறையில் அடைத்துவிட்டு அவ்வீட்டில் மத்தியில் எல்லாரும் கூடும் 'சென்ட்ரல்ஹால்' என்னும் மத்திஹாலில்போய் சாப்பிட உட்கார்ந்தார்கள்.

சங்கர் கொஞ்சம் கொஞ்சமாக மூர்ச்சை தெளிந்தெழுந்தார். கண்ணைத் துடைத்தார். சுற்றும் பார்த்தார். ஒன்றும் புலப்படவில்லை. தான் ஓர் அறையிலடைக்கப்பட்டு இருப்பதாக மட்டும் தெரிந்து கொண்டார். சரியாக எழுந்து உட்கார்ந்தார். அறையை நன்ருய் உற்றுப் பார்த்தார். கதவண்டை சென்ருர் மறுபடி உள்ளே வந்தார். தனக்கு இடக்கைப் புறமாக அடுத்த அறைக்குச் செல்லும் கதவொன்றிருந்தது. அதைத் திறந்து பார்த்தார். நன்ருய்ப் பூட்டப்பட்டிருந்தது பக்கத்தில் ஒரு முக்காலி யொன்றிருந்தது. அதை யெடுத்தார். படீர்படீரென்று கதவில் பலமா யடித்துக் கதவை யுடைத்தார். இச்சங்கத்தைக் கேட்ட திருடர்கள் ஓடி வந்து பார்த்ததில் சங்கர் மூர்ச்சையுராய்க் கிடந்தார். சிகாமணிகள் வாயிலண்டை நின்று பார்த்துவிட்டு ஒன்றுமில்லை யென்று நினைத்துக்கொண்டு போய் விட்டார்கள். உடனே சங்கர் மறுபடி எழுந்து சுற்றிப் பார்த்தார். மறுபடியும் கதவையுடைக்க வாரம்பித்தார். இச்சப்தம் தலைவன் கொங்கணவ வீரனுக்கு எட்டிற்று. உடனே தான் எழுந்து மடமடவென்று சங்கர் அடை பட்டிருக்கும் அறைக்கு வந்தான். உடனே கதவைத் திறந்து உள்ளே வந்தார். உடனே சங்கர் தனது பலமான இருகைகளையும் கொங்கணவனின் கழுத்தில் போட்டுக்கட்டி உருட்டித் தனது வலது காமுஷ்டியினுல் ஓங்கி அவனது மார்பில் ஒருகுத்து வைத்தார். கொங்கணவன் தாங்கமாட்டாமல் மூர்ச்சையாஞன். உடனே அவன் கையில் வைத்திருந்த தடியை எடுத்துக்கொண்டு திறந்துகிடந்த வாயிலின் வழியாய் வெளியே வந்தார் நமது சங்கர். க்ஷணத்தில் ஈ மொய்த்தற்போலப் பத்துப் பன்னிரண்டு தடியர்கள் வந்து சூழ்ந்து கொண்டார்கள். சங்கர் தனது முழு பலத்தையும் வைத்து வந்தவர்களை யெல்லாம் அடித்துக் கீழே வீழ்த்தினர். விழுந்தவர் 'குப்புற விழுந்தாலும் மீசையில் மண்ணெட்டவில்லை' யென்ற சம்பரதாயமாய் மறுபடி யெழுந்து சண்டை செய்தார்கள். அதில் ஒருவன் தன் கத்தியின் அடிப்பாகத்தால் சங்கரனது மண்டையில் அறைந்தான். சங்கர் நிற்கமுடியாமல் தள்ளாடிக் கீழே விழுந்தார். கள்வர்கள் அவரை அம்புஜம் அடைப்பட்டிருந்த அறைக்கு மேலறையில் கொண்டுபோயடைத்தார்கள்.

3-ம் அத்தியாயம் முற்றிற்று.

அத்தியாயம்-4.

அநங்கன் அடைந்த அவக்கேடு.

நமது கதாநாயகியாகிய அம்புஜத்தை தடியர்கள் தூக்கிவந்த அன்று மாலை அநங்கன் யாதோ ஒரு கார்யார்த்தமாக வெளியில் சென்றிருந்தான். திரும்பிவந்ததும் வழக்கம்போல் அம்புஜத்தி னறையின் சென்றுபார்த்தான் அம்புஜத்தைக் காணவில்லை. திகைத் தான். நந்தவனம் சென்று தேடினான் அங்கும் இல்லை. மறுபடி பங்களாவிற்கு வந்தான். அறைகளிலெல்லாம் தேடினான். வீடு முழுவதும் பார்த்தான் எங்கும் காணவில்லை. அம்புஜம்! அம்புஜம்! என்றவ்வூரெங்கும் தேடினான். அகப்படவில்லை. "என்ன செய் வேன் தெய்வமே! என்னைக்காணாது அரைக்ஷணமு மிருக்கமாட் டாளே. எங்குசென்றாள். இந்த அநங்கனே சொந்தத் தந்தை யல்லவே. இங்கிருந்தென்ன 'வென்றெண்ணி ஓடிவிட்டனளோ?' அல்லது பருவம்வந்த மங்கையானதால் மாற்றானொடு சென்றன ளோ? சைபாது எண்ணினேன். இவ்வாறு எண்ணின நாவை யறுத் தெரிய வேண்டாமா? அம்புஜம் மிகவும் நல்லவள். அப்படி யெல் லாம் நினைப்பது தவறு. மற்றும் எனது பார்வையில் யாதேனும் குறை யேற்பட்டு அதை நினைந்து ஓடி விட்டனளோ? அப்படியே சென்றாலும் எங்குதான் சென்றிருப்பள். இப்பக்கங்களிலுள்ள ஒரு ஸ்தலமாவது அவளுக்குத் தெரியாதே. யாரிடம் சிறிது அன்னங் கேட்பாள். செல்வமாய் வளர்ந்தவளாச்சே. இரந்துண்பது இழி வென்றெண்ணி பட்டினியாய்க் கிடக்கின்றனளோ? அல்லது இவ் விதமான உயிர் வாழ்வதிலும் வாழாமை 'முன்னினிது' என்று ஆழ குளங்குட்டைகளில் விழுந்திறந்தனளோ? ஐயோ! ஜெகதீசா! அப் படியாயின் காதியாதாகும். யாதுசெய்வேன். எவ்வாறுய்வேன். அடி என்கண்ணே! அம்புஜம்! நீயாரிடம் செல்லுவாய். உன்னை உன் தகப்பனார் எவ்வளவு அன்பாக வளர்த்தார். யானும் என்மனச் சாக்ஷிக்கு விரோத மில்லாமல் அன்பாகவே நடத்தினேன். யாதொரு குற்றமும் செய்தறியேனே."

(தொடரும்)

P. N. Sankaranarayanayyar,
Son of
P. S. Narayanaswami Ayyar Avl.,
Papanjady.

ஓம்

தருமசீலன்.

" அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு."

(All Rights Reserved.)

புத்தகம் 6	உருத்திரோற்காரி௵ கார்த்திகை௴ 1923௵ நவம்பர்௴	சஞ்சிகை 8.

நீதிச் செய்யுட் சிந்தாமணி.

மனைவியரோடு காட்டிலேயிருந்து தவஞ்செய்வதால் பழவினை தீராதெனல்.

" நுண்டுகில் வேதலஞ்சி நெருப்பகம் பொதிந்து நோக்கிக்
கொண்டுபோய் மறையவைத்தாற் கொந்தழல் சுடாதுயாமே
கண்டத்தி னவியார்தங் கடிமனை துறந்து காட்டிட்
பண்டைச்செய் தொழிலிற்பாவம் பறைக்குற்றாற் பறைக்கலாமே."

(இ-ள்.) "(பழவினைகழிய மனைவியரோடு காட்டில் தவஞ்செய்பவர்களே!) நுட்பமான வஸ்திரம் வெந்துபோகுமென்றஞ்சி, அதற்குள்ளே நெருப்பை வைத்து அதைச்சுருட்டி, மறைத்து வைக்கத்தக்க ஓரிடத்தைப் பார்த்து அங்கே கொண்டுபோய் மறையும்படி ஒளித்துவைத்தால், உள்ளே கூடிய அந்நெருப்பானது அதைச்சுடாததாகுமோ? உடனே சுட்டெரித்து விடுமென்றோ? அதுபோலப் பழவினைக்கஞ்சி, கழுத்திற் புழுகணிந்த மாதர்களின் காவலையுடைய இல்லத்தைவிட்டு நீங்கி அவர்களைக் காட்டிற்குள்ளே கொண்டுபோய் வைத்துக்கொண்டு தவஞ்செய்து, அந்த முற்பிறப்பிற்செய்த தொழிலினாலே வந்த பாவத்தைப் போக்குதற்கு முயன்றால், அவ்வாறு போக்குதல் முடியுமோ? மேலும் பாவமன்றோ வந்துசேரும்." என்பதாம்.

(வி-ரை.) பழவினை கழியவேண்டுமானால் பெண்களின் ஆசையையொழித்துக் காட்டில் தனித்திருந்து தவஞ்செய்யவேண்டும். அங்ஙனமின்றி அவர்களுடன் சேர்ந்து தவமியற்றினால் பண்டைவினை யொழியாமல் மேலும் தீவினைசேரும். ஆமே என்பதிலுள்ள ஏகாரம் வினாப்பொருளது. 'அவர்களைக் காட்டிற்குள்ளே கொண்டுபோய் வைத்துக்கொண்டு தவஞ்செய்து' என்னுந் தொடர்கள் இசையெச்சமாக வருவித்துரைக்கப் பட்டன.

(சீவகசிந்தாமணி 1433)

தருமசீலன்.

உருத்திரோற்காரிஞூ கார்த்திகைமீ.

"செய்தவ முதிர்ந்தாற் கைதவமாளும்."

இதன் பொருள்:—"செய்தவம்-(ஒருவன்) செய்யும் தவமானது, முதிர்ந்தால்-(நாளுக்கு நாள் விருத்தியடைந்து) முற்றுறுமேயானுல், கைதவக்-பொய் (அதாவது, அஞ்ஞானமானது.). மாளும்-நசித்துப் போய்விடும்." என்பதாம்.

உலகத்தில் ஒருவன் ஞானத்தைபடைய வேண்டுமானல் தவத்தைச் செய்யவேண்டும்; அத்தவம் விருத்தியடைய விருத்தியடைய அஞ்ஞானமானதுதானே அகன்றுவிடும்; அஞ்ஞானம் நீங்கின மாத்திரத்தில் ஞானம்வந்து கைகூடும். அந்த ஞானத்தால் மோக்ஷம் சித்தியாகும். அங்ஙனம் தவஞ்செய்வதிலும் மெய்யாகவே உலகல் பற்றினையொழித்து உண்மைத் துறவுபூண்டு, இன்பதுன்பங்களில் விருப்பும் வெறுப்புமின்றி, நிஷ்களங்கமான மனஸோடு யோகம் பயிலவேண்டும். அங்ஙனம் செய்யுந்தவமே முத்திக்கு வித்தாகும். அங்ஙனமின்றி உலகத்தார் தம்மை மதிக்கவேண்டித் துறவிகள் வேடம்பூண்டு மேலுக்கு அவர்களைப் போன்று நடித்து, மனத்தில் ஆசையகலாமல் முப்போதுண்டு எப்போதும் இரகசியமாக உலக போகங்களை அனுபவித்து பேதை ஜனங்களை ஏமாற்றி வருவது தவமாகாது. இத்தகைய போலித்தவத்தினரும், தவமே செய்யாமல் உலக பந்தங்களில் மிகுதியும் சிக்கியிருப்போரும் ஞானத்தையோ, மோக்ஷத்தையோ அடைதல் முடியாது. அரைகுறையாகத் தவஞ்செய்வதாலும் ஞானம் முதலியன ஏற்படுவது துர்லபம். இதுபற்றியே நம் மூதாட்டியார், இந்நீதியைக்கூறி உலகினர்க் கறிவுறுத்தினர். இங்ஙனங்கூறியும் சிலர், இந்நீதிகளை யுணராது, மனத்துள் அறுவகைக் குற்றங்களையும் நிரப்பி வைத்துக்கொண்டு பக்திமான்களைப் போன்றும், நீதிமான்களைப் போன்றும், துறவிகளைப் போன்றும் நாடகமாடி வாய்ஞானம் பேசித்திரிவதை அறிஞர் பலர் அறிவர். இத்தகைய நடிப்பால் பயனென்னையோ,

"ஈதலறந் தீவினைவிட் டீட்டல்பொருள் எஞ்ஞான்றும்
காதலிருவர் கருத்தொருமித்—தாதரவு
பட்டதே யின்பம் பரனைநினைந் திம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு."

என் பதற்கிலக்கியமாக நடப்போரே இம்மை மறுமை ஆகிய இரண்டிடங்களினும் இன்பம்பெற்று மோக்ஷ சாம்ராஜ்ஜியத்தை யடைவரென்பது திண்ணம்.

ஞான தீபம்.

(முன்தொடர்ச்சி புத்தகம்-4, சஞ்சிகை-5, பக்கம் 126)

மூன்றும் அத்தியாயம்

"ஓர்கின்றிலையுனை யோனிகடோறும் பல்லூழியுய்த்து
மார்கின்றிலை யின்னுமாசை நெஞ்சே யினியந்தகனூர்
சார்கின்ற போதனக்குச் சரணூர் சொல்லுந் தாமரைப்போ
தூர்கின்ற பாதரல்லா லரியார் மற்றொருத் தரையே."

"ஸ்ரீ திருநூற்றந்தாதி"

அமுதசாகரர் :—

"ஆகட்டும், குழந்தாய்! நீ வேண்டியவாறு இக்கதையின் உட்கருத்தை வெள்ளிடை மலைபோல் தெள்ளிதுல் புலம்படும் வண்ணம் பற்றிலான் பாதம்பணிந்து புகலுகின்றேன்.

(அமுதசாகரர் அவரது வழக்கம்போல் தம்பூர் சுருதியை மீட்டிக்கொண்டும் தமது கரங்களால் தாளம்போட்டும், பின்வரும் பாடலை வெகு இனிமையாய் பாடுகிறார். புத்திசேனன் அசைவற்ற மனதுடன் தமது ஆசிரியர் முகத்தை பார்த்த வண்ணமாய் அப்பாடலை மிக்க ஆர்வத்துடன் கேட்கின்றான்."

சுருட்டி சதுஸ்ர ரூபகம்.

விண்ணோர் புகழ்ந்தேத்து மருகையா யுனைத்தொழுதேன்
புண்ணாக நீர் பண்ணுமலே, என்னை ரக்ஷித்திடுவாய்
பண்ணேனினி பாவங்கள் நானெழில் முக்குடை யோனே!
கண்ணியிரு கற்பகத்தை நாடிப் பணிந்தேனே. (1)

பஞ்சேந்திரிய குஞ்சரங்கள் வஞ்சித் திழுக்குதே
பஞ்சைபோல கெஞ்சியும்மை தஞ்சமடைந்தேனே
விஞ்சையர்கள் போற்று மருகையாவு மக்கடிமை
இஞ்சிமூன்று முடையோனுந்தன் செஞ்சீரடி தொழுதேன் (2)

எத்தனைதான் கற்கினுமெனி தயமொடுங் காதோ
நித்தமுனைப் பணிந்தாலுமுன் சித்தமிரங் காதோ
அத்தாவுந் தனடிபணிந்தேன் முத்தியெனக் களிப்பாய்
எத்திசையும் போற்றுமருகையா வுமக்கடிமை (3)

சுக்கிலத்யான மடைந்தபின்னர் கவிப்பாருனை வளைப்பார்
பக்கத்தினி லமருன்னை போற்றித் துதிப்பார்கள்
திக்கம்பரத்தானே யுந்தன் திவ்வியத் தொனிகேட்பார்
பக்தன்ஜீவ இந்திரனுனை போற்றிப் பணிந்திட்டேன். (4)

குழந்தாய்! அடிக்கடி பாடிக்கொண்டு களிக்கின்றேன் என்று நினைக்கலாம். நான் அப்படிச் செய்வதற்கு காரணமுரைக்கின்றேன். கேட்பாயாக. மனத்தை பெரியோர்கள். குரங்கிற்கும் குதிரைக்கும். அஜத்திற்கும் பன்றிக்கும் மண்டூகத்திற்கும் மீனுக்கும் உருவகப்படுத்தி கூறியிருக்கின்றார்கள். பஞ்சேந்திரிய விஷயங்கள் என்னும் கிளைகளின்மேல் விளையாடுவதாலும், அக்கிளைகளைவிடாது பற்றுவதாலும் குரங்கிற்கும். விஷயங்களில் பாயுந்தன்மை யுடையதால் பாய்மாவுக்கும் (குதிரைக்கும்), விஷைய சுகமாகும் புல்லை வயிறுரா மேய்ந்து, பாவமெனும் நீரைக்குடித்து, ஒய்ந்த நேரங்களில் விஷையங்களை அனுபவித்த நினைவெனும் அசையைப்போட்டு, கர்மமெனும் குட்டியை ஈன்று "மே மே" (சம்ஸ்கிருதத்தில் "என்னுடையது" "என்னுடையது" என்று பொருள்) என்று கத்துவதால் ஆட்டிற்கும், அறுசுவை யுண்டியாம். ஆன்றோருரையை நீக்கி, "பவ்வி"யாடும் புலன்கெட்ட புல்லறிவானருரையை ஏற்பதால் பன்றிக்கும், பெரியோர் சென்ற மார்க்கமாகும் தாமரைத் தடாகத்தில் விட்டாலும் அதை விரும்பாது, தான் விரும்பிய இந்திரிய சுகமெனும் பூச்சிகளையே பற்றுவதால் மண்டூகத்திற்கும், நன்ஞானமெனும் பாற்கடலில் கிடத்தினும், அப்பாலே நீத்து, நிஷேத பதார்த்தமாகும் அறிவிலிகள் உரையை அறவுரையென ஆதரிப்பதால் மச்சத்திற்கும், மனதை உருவகப் படுத்தலாம் அடிக்கடி பக்திரசம் பொருந்திய கீர்த்தனைகளை பாடினால் தான், கோலைக்கண்ட குரங்குபோலும். கடிவாளம் பூட்டிய கந்தருவம் (குதிரை) போலவும், அடங்கி நாம் சொன்னபடி கேட்கும். ஆகையினால் தான் மிகப் பெரியோர்களும் தாம் இயற்றிய நூற்களை இசையுட னமைத்திருக்கின்றனர். தோத்திரங்களையும், பஜனைகளையும், விடாது கேட்பதினால் மதன்னீறுடும் இவன் மனமும் சிற்சில சமையங்களின் மாவுத்தனுக்கடங்கி நிற்

கும் மாதங்கம் (யானை)போல் ஒடுக்கி நிற்கின்றது. அடிக்கடி தோத்திரங்களை பாடி, பின் மேற்கொண்ட விஷயத்திற்கு நான் செல்வதின் நோக்கமிதுதான்.

கதையின் கருத்தை யுரைக்கின்றேன் கவனமாய் கேள்.

(1) "ஈட்ட வுலகத்தியல்பேயா முன் சொன்னவனமே" என்றதால், துன்பம் நெருங்கிய சதுர்க்கதி பிரமணமாம் சப்ஸாரஸ்வாபத்தே கானகமென்றும்,

(2) "புகையார் வனத்திற்புருடன் புலம்பிச் சுழலும் மனமே" என்றபடி காமக்ரோத வெகுளி யெனும் புகை நிறம்பிய சம்ஸார வனத்தில் சுழலும் மனதையுடைய ஜீவனையே வழிப்போக்கனென்றும்,

(3) "காய்ந்தெறி கடுங்கறன்னைக் கவுட்கொண்ட களிறுபோல" என்றபடி, மனிதர்கள் உயிரை எவ்விதத்திலும் கொண்டுபோக வேண்டுமென்ற எண்ணத்தையே யுடையதாகி, அவர்களை விடாது துறத்தும் மாணத்தை மதகரியென்றும், இரவுபகலை கருப்பெலியென்றும் வெள்ளெலி என்றும்.

(4) "அழுக்காறு. அவா. வெகுளி. இன்னுச் சொலின்றுண்டும் இழுக்கா வியன்றதாம்" என் ஆன்றோருசைப்படி, தன்னை திண்டியவரை உயிர் துறக்கச்செய்யும் உரகத்தை போன்ற பேராசை, பொறாமை, கோபம், கடுஞ்சொற்கள் என்ற இக் குணங்களையே நான்கு பாம்புகளெனம்

(5) "சிதறி விழுந்த கிணற்றிற் றிரும்பியேனு தொழிந்தோன பதறி நாகம்புகுந்து பாவம் தொலையாததுவாம்" என்றியம்பி யிருத்தலால், திரும்பி எழுதவண்ணம். வழிப்போக்களை விழுங்கிய பேழ் வாய் முதலையை பெருநகரத்திற்கும்.

(6) "ஊசற் கயிறற்றூற்போல கிடக்குமே கூற்றத்தெயிறுற்றிடை முரிந்தக்கால்" என்ற அறவுரைக் கிணங்க ஜீவனது சிறிய வாழ்நாளை கயிற்றிற்கும்,

(7) பாவமதாயாபத்து பயிலிடமாய்த் தம்மிற்றும் பற்றின்றும், தாவுமணக்கற்பனையாற் சம்பந்தமா யிருப்புச் சலாகை போலாய், மேவுபெருஞ் செலவதுக் கிடமாகுமெப் பொருளும் விடயத்தாலும், பூவலயத்தாலுமெது பயன்யாமார் வருவதெது பொய் பொய் பொய்யார் என்ற ஞானவாக்கிட்ட நல்லுரை கிணங்க, சகல துன்பத்

திற்கும் இருப்பிடமாயிருக்கின்ற உலக வாழ்க்கையை கிணற்றிற்கும்.

(8) "களின விதயத்து னுயிர்நெறி போய்க்கந்த நாட்டத்தால் கட்டுண்ணேனனே வண்டேபோல்" என்றபடி உண்டாகிய ஜீவன் விரும்பி முடிவில் மரிக்கும். விஷைய சுகத்தை தேனிற்கும், அச்சுகத்தை நல்கும் பஞ்சேந்திரியங்களை தேன் கூண்டிற்கும்.

(9) "இந்திரிய குஞ்சரத்தை ஞானவிருக்கயிற்றாற் சிந்தனைத் தூண் பூட்டிச் சேர்த்தியே பந்திப்பார் இம்மைப் புகழுமினிச் செல்கதிப்பயனுந் தம்மைத் தலைப்படுத்துவார்" என்று சந்தாரு பாடியார் சாற்றியபடி, இந்திரியங்களெனும் யானைபை த்யானமெனும் தூணில் சேர்த்து கட்டவும், இம்மை மறுமைப் பயன்களை அடையவும் சாதகமாயுள்ள ஞானத்தையே, சந்நியாசி கிணற்றினுள் விட்ட கயிற்றுவடத்திற்கும்,

10 "விஜிதமநஸிஜகேதும் நிர்மலம் । ஸத்ய நிர்விகாரம்
ரஹித ஸகலஸங்கம் ஸம்யமாஸக்த சித்தம்
ஸ்வநயநிபுணபாவம் ஜ்ஞாததத்வம் பவார்த்தம்
ஜநநமரணபீதம் ஸதாசாரம் ஆதிக்யம் ॥
ஸ்வசரணநதமுக்ஷம் ஜ்ஞாநஸங்கல்பசாகம்
விமலஜநவிஹங்காகீர்ண ஆசார்ய வ்ருக்ஷம் வந்தே

என்றபடி, "மன்மதனை ஜெயித்தவரும், நிர்மலமாயும், காமக்ரோத விகாரமின்றியு மிருக்கின்ற மனதையுடையவரும், சகல பரிக்கிரகங்களையும் விட்டவரும், சத்விஷையங்களில் ஆசையுடையவரும், நல்ல நயத்தில் நிபுண ஸ்வரூபத்தையுடைய வரும். தத்துவத்தை அறிந்தவரும், ஜனன மாணத்திற்கு பயந்தவரும் நற்சாட்சியையே வோாகவும். நன்ஞானத்தை அடிமரமாகவும். ஒழுக்கங்கள் ஆகிற கிளைகளில், முனிக் கூட்டங்களாகும் பக்ஷிகள் நிறைந்து மிருக்கப் படாநின்ற ஆசார்யராகிற மஹா விருக்ஷத்தை வந்திக்கிறேன்" என்று அறிவிற் சிறந்தா பெரியோர்களும் பன்முறை வணங்கும் ஸ்ரீ ஆசாரிய பரமேஷ்டியையே இக்கதையில் சந்நியாசிக்கும் பெரியோர்கள் முறையே உருவகப்படுத்தி யிருக்கின்றனர். ஆதலால் என்னருமைக் குழந்தாய்! நாம் இக்கதையினால் அறிந்துகொண்டது யாதெனில், தெளிவாய்ச் சொல்லுகிறேன் அலைவற்ற மனதுடன் கேட்பாயாக. துன்பம் நிறைந்த நாற்கதிகளில் உழன்று மனிதர்களை விடாது கவர்ந்து செல்லும் நமனும், அணுவபொறாமை, பேராசை, கோபம்,

கடுஞ்சொற்கள் என்ற இந்நான்கு குணங்களையும் படைந்து, சகல ஆபத்து கிட்டமாயிருக்கின்ற உலக வாழ்க்கையிலுழன்று, அப்பொழுது சிறிது புண்ணியவசத்தால் கிடைக்கும் அற்பவிஷைய சுகங்களில் அழுந்தி ஆனந்தபரவசனுப் வெறிகொண்டு ஆசார்யபரமேஷ்டிகளின் நல்லுரையில் நம்பிக்கைவையாது, முக்தி எய்தற் கேதுவான உயிரை நமனுக்களித்து முடிவில் நரகத்திற்கு சென்ற நம் கதாநாயகன் போன்றிராது, நற்சாட்சி, நன்ஞானம், நல்லொழுக்கம் என்ற இம்மதிப்பற்ற மாணிக்கங்களை பெற்றால் தான் அழிவிலின்ப மடைய முடியுமென்று இக்கதை போதிக்கின்றது. இக்கொள்கையையே,

"பேதைமை யென்னும் வித்திற்பிறந்து பின் வினைகளென்னும்
வேதனை மரங்கணுறி வேட்கைவேர் வீழ்த்து முற்றிக்
காதலும் களிப்புமென்னுங் கவடுவிட்ட வலம்பூத்து
மாதுயரிடும்பை காய்த்து மரணமேகனியும்......"

"மெய்வகைதெரிதன் ஞானம் விளங்கியபொருள் கடம்மைப்
பொய்வகையின் றுதந்தேறல் காட்சிபைம் பொறியும்வாட்டி
யுய்வகை யுயிரைத்தே யாதொழுகுத லொழுக்கமூன்றும்
மிவ்வகை நிறைந்த போழ்தே யிருவினைகழியும்......"

என்னு செய்யுட்களில் தெய்வபுலமை வாய்ந்த ஸ்ரீ திருதக்க தேவரும் நன்கு வற்புறுத்து கின்றார்.

ஏ! புத்திசேனு! நான் சற்று முன்கூறிய கதையின் கருத்தும் ஒன்றாய் இருக்கின்றது பார்த்தாயா! அறியாமை என்னும் வித்தில், வேதனைஎன்னும், மரங்கள் பிறந்து, ஆசையென்கின்ற வேரை விட்டு, முற்றி, அடையப்பெறுக வஸ்துக்களின் மேல் ஆசையும் அவைகளை அடைந்கதினுல சந்தோஷமுமாப் கிளைகளைவிட்டு, அவலத்தை பூத்து கவலையைக் காய்த்து, மரணமென்னும் கனியைப் பழுத்துஈந்து, பிறகும் காய்தற்கு இம்மரமே காரணமாயிருப்பதால், உண்மைத் தத்துவத்தை உணர்ந்து, சந்தேக விபரீதங்களை களைந்து, ஐம்பொறிகளையும், ஐம்புலன்களில் செல்லவொட்டாலல் தடுத்து, உயிரைக்கெடாதே அவ்வுயிருய்யும் வகை ஒழுகினுல், இம்மூன்றும் நிறைந்தபோதே ஜீவர்கள், இருவினைகளை அறவே நீக்கி பேரானந்தம் நல்கும். முக்தியடைவர் என்று தான் ஸ்ரீதேவரும் திருவாய் மலர்ந்திருக்கின்றனர்.

(இவர்கள் இவ்வாறு பேசிக்கொண்டிருக்கையில் ஒரு தபால்காரன் இவர்களை அணுகினுன்.)

புத்திசேனன்:—நீயார்? எங்குவந்தாய்?

தபால்காரன்:—தங்களுக் ஒரு கடிதம் வந்திருக்கின்றது.

இதை வாங்கிக்கொள்ளுங்கள் (என்று சொல்லி, ஓர்கடிதத்தை புத்திசேனன்கையில் வணக்கமாய் கொடுத்து "குட் மார்னிங்" என்று வணங்கி விரைவில் சென்ருன்) அமுதசாகார்! (தபால்காரன் கொடுத்த கடிதத்தை வாங்கி வாசித்ததும் "ஓ"வென்று அலறி அடியற்ற மரம்போல் அவனியில் வீழ்ந்துகிடங்கும் புத்திசேனனை வாரியெடுத்து தம் மார்போடணைத்து தமது கமண்டல நீரால் முகத்தை துடைத்து தம்மயில் தோகையால் அவனது த்ரேகத்தை பன்முறை தடவி) ஏ! பெறுதற்கரிய என்னருமை புதல்வ! ஏன் இவ்வாறு வருந்துகின்ருய்! "வன்பெரும் நெருப்பினை புன்புழுபற்றுமோ? வானை ஒருமான் தாவுமோ,? வலியுள்ள புலியை ஓர் எலி சீறுமோ. காற்றில் மழைதோவுமோ? இருள்வந்து ஆக்குமோ? என்றபடி ஒன்றிற்கும் அஞ்சாத உன்மனம் ஏன் கலங்கிற்று. எத்தகைய துன்பம்வரினும், ஊழ்வினைப் பயனென்று கருதி உதாசினமாய் இருப்பதல்வோ உத்தமர்க்கழகு இஃதை யுணர்ந்தா நீயும் இவ்வாறு உன் மத்தரைப் போலுழல்வதழகோ? நான் சொல்வதை செவிசாய்த்து கேட்பாயாக,

"பெருகதிரண்டமுகிலெல்லாம் பெருங்காற்றாலே பொகுவதல்போல்
வருகற்பனை நாசத்தாலே மனம்போ யிறக்குமன மிறந்தாற்
பொருகற்பாந்த மாருதமும் பொங்கு கடலும் புவியனைத்து
முருகச் சுடுபன்னிருக திருமொருகால் வரினுமிட ருண்டோ."

என்றபடி, உண்மை தத்துவங்களை உணர்ந்து, மன்தை வென்றோர்களை ஊழிக்காற்றும், பொங்குகடலும், உலகமெல்லாவற்றையும் சுட்டெறிக்கும் துவாதச இரவியும் சேர்ந்துதாகினும், பெருங்காற்றினுல், நெருங்கிய மேகங்கள் கலைவதுபோல, ஒன்றும் செய்ப முடியாது. ஆகைபால் நீ ஒன்றிற்கும் அஞ்சவேண்டாம். எங்கே அக்கடிதத்தை கொடு பார்ப்போம் (என்று அவன் கையிலிருந்த கடிதத்தை வாங்கி வாசித்துவிட்டு) நல்லது, நீ இக்குணமே சந்திரகிரிக்கு புறப்படுவாயாக. நானும் சில விடங்களுக்கு போகவேண்டி யிருக்கிறது. போய் வருகிறேன். (புத்திசேனன் அமுதசாகாரை சாஷ்டாங்கமாய் நமஸ்கரித்து, விடைபெற்று, கறவையைப் பிரியும் கன்றைப்போல, அவ்விடத்தை விட்டுப் போனுன்)

(மூன்ரும் அத்தியாயம் முற்றும்)

(இன்னும் வரும்.)

சிக்கில் அ. ஜீவேந்திரன்,

ஸ்ரீஜிநாயநம:

ஸ்ரீ ஜைன ஸித்தாந்த ப்ரவேசிகா.

நத்வாஸ்ரீ நேந்த்ரம் கதசர்வதோஷம்
சர்வஞ்தேவம் ஹித தேசகம்ச
ஸ்ரீஜைன சித்தாந்த ப்ரவேசிகேயம்
விரச்ய தேஸ்வல் பதியாம்ஹிதாய.

1-வது அத்தியாயம்.

1. ப்ரச்ன.—பதார்த்தங்களை தெரிந்து கொள்ளக் கூடிய விதங்களெத்தனை?

உத்தரம்:—நாலு அதாவது, லட்சண, ப்ரமாண, நய, நிக்ஷேப.

2. ப்ர:—லட்சணமென்றுலென்ன?

உத்:—ஓரேஸ்தளத்தில் கூடிகொண்டிருக்கிற அனேக பதார்த்தங்களுள்ளிருக்கிற ஏதாவதொன்றே வேறாக செய்கிற ஹேதுவிர்க்கே லட்சண மென்பார்கள். உதாஹரண ப்ராணிகளுடைய லட்சணம், சைதன்ய.

3. ப்ர:—லக்ஷணத்தில் எத்தனை விதங்கள்?

உத்:—இரண்டு அதாவது ஆத்மபூத, அனாத்மபூத.

4. ப்ர:—ஆத்மபூத லக்ஷணமென்றுலென்ன?

உத்:—எந்த லக்ஷணமானது வஸ்துவினுடைய ஸ்வரூபத்திலேயே சேர்ந்துகொண்டிருக்கிறதோ, அதற்கே, ஆத்மபூத லக்ஷண மென்பார்கள். உதாஹரண நெருப்பினுடைய லக்ஷணம் உஷ்ணத்வ.

5. ப்ர:—அனாத்மபூத லக்ஷணமென்றுலென்ன?

உத்:—யாதொரு வஸ்துவினுடைய ஸ்வரூபத்தில் கூடிகொண்டிருப்பதில்லையோ அதர்க்கு அனாத்மபூத லக்ஷண மென்பார்கள். உதாஹரண கோலுபிடித்துக்கொண்டிருக்கிற புருஷன், "கோலு" இது அனாத்மபூத லக்ஷணம்.

6. ப்ர:—லக்ஷணாபாசமென்று என்னத்திர்க்கு சொல்லுவார்கள்?

உத்:—எந்த லக்ஷணத்தில் தோஷமிருக்கிறதோ அதர்க்கே லக்ஷணாபாச மென்பார்கள்.

7\. ப்ர:—லக்ஷணத்திர்க்கு எத்தனை தோஷங்களிருக்கிறது?

உத்:—மூன்று அதாவது. அவ்யாப்தி, அதிவ்யாப்தி, அசம்பவி.

8\. ப்ர:—லக்ஷியமென்றாலென்ன?

உத்:—எந்த லக்ஷணத்தை செய்யப்படுகிறதோ அதர்க்கே லட்சியமென்பார்கள் அதவா லக்ஷணத்தி நின்றும் வர்ணிக்கப்படுவதே லக்ஷ்ய.

9\. ப்ர:—அவ்யாப்தி தோஷத்தினுடைய ஸ்வரூபம் எது?

உத்:—லக்ஷியத்தினுடைய ஒரு பாகத்தை வியாபித்துக் கொண்டிருக்கிற லட்சணத்திர்க்கு அவ்யாப்திதோஷ அதவா அவ்யாப்தி லக்ஷணாபாச மென்பார்கள். உதாஹரண பசுவினுடைய லக்ஷணச்ருங்க (கொம்பு)

10\. ப்ர:—அதிவ்யாப்தி தோஷமென்று எதற்காக சொல்வார்கள்?

உத்:—லக்ஷ்யம், அலக்ஷ்யம், இந்த இரண்டிலேயும் இருக்கிற லக்ஷணத்திர்க்கே அதிவ்யாப்தி தோஷமென்பார்கள் உதாஹரணம், பசுவினுடைய லக்ஷணம் ச்ருங்க (கொம்பு.)

(இன்னும் வரும்.)

விருதூர். திரு. அப்பாண்டை நயினார்.

அனந்தபுரம் ஸ்கூல் டீச்சர்,

ஜாகீர் ஆரணி.

சிக்ஷண.

𑌯𑍋𑌵𑌿𑌶𑍍𑌵𑌂 𑌵𑍇𑌦𑌵𑍇𑌦𑍍𑌯𑌂 𑌜𑌨𑌨𑌜𑌲𑌨𑌿𑌧𑍇𑌰𑍍 𑌭𑌙𑍍𑌗𑌿𑌨𑌃𑌪𑌾𑌰𑌦𑍃𑌶𑍍𑌵𑌾

𑌪𑍌𑌰𑍍𑌵𑌾𑌪𑌰𑍍𑌯𑌾𑌵𑌿𑌰𑍁𑌦𑍍𑌧𑌂 𑌵𑌚𑌨𑌮𑌨𑍁𑌪𑌮𑌂 𑌨𑌿𑌷𑍍𑌕𑌲𑌙𑍍𑌕𑌂𑌯𑌦𑍀𑌯𑌂

𑌤𑌂𑌵𑌨𑍍𑌦𑍇𑌸𑌾𑌧𑍁𑌵𑌨𑍍𑌦𑍍𑌯𑌂 𑌸𑌕𑌲𑌗𑍁𑌣𑌨𑌿𑌧𑌿𑌂𑌧𑍍𑌵𑌸𑍍𑌤 𑌦𑍋𑌷𑌦𑍍𑌵𑌿𑌷𑌨𑍍𑌤𑌂

𑌬𑍁𑌦𑍍𑌧𑌂𑌵𑌾𑌵𑌰𑍍𑌧𑌮𑌾𑌨𑌂 𑌶𑌤𑌦𑌲𑌨𑌿𑌲𑌯𑌂 𑌕𑍇𑌶𑌵𑌂𑌵𑌾𑌶𑌿𑌵𑌂𑌵𑌾

யாதொருத்தன் சமஸ்தமான வேத முதலாகியதை அரிந்தவனே சம்சார சமுத்திரத்தி நின்றும் கறையேற்றிவைப்பவனே முன் பின் வார்த்தையில் விரோதமில்லாதவனே, களங்கமில்லாதவனே, சகலமான குணங்களுக்கு நிதிபோன்றவனே, தோஷரஹிதனே, அப்பேர்பட்டவன் புத்தனாகட்டும், வர்த்தமானனாகட்டும், பிரம்மா

வாகட்டும், விஷ்ணுவாகட்டும், சிவனுகட்டும், அப்பேர்பட்டவனை நான் நமஸ்கரிக்கிறேன்.

பாலர்களுடைய மனதானது வெண்மையான வஸ்திரம் போன்றது. அதில் எந்த சாயம் போட்டாலும் பிடிப்பதுபோல் சிறு வயதில் எதை கற்றுகொடுத்தாலும் அப்படியே செய்ய முடிகிறது சிறு வயதில் நம்முடைய புத்தி எல்லா ரீதிகளிலும், யோக்கியமான வர்த்தனையில் நம்மை ஈடுபடுத்துவதற்காக தங்கள் தங்கள் பாலபாலகியர்களை வித்தியாப்யாசம் கைதொழில் இதுகளை சிக்ஷணைசெய்து வைப்பதானது பெற்றோர் கடமை யல்லவா? நம்ம புத்திக்கி உண்டாக தக்க சம்ஸ்காரவிசேஷத்தை சிக்ஷணை என்று சொல்லிக்கொள்வது.

2. மானவீய பிராணிகள் உத்பக்தியான காலமுதல் நாளது வரைக்கும் அனேக யுகங்கள் கழிந்துபோயின. ப்ரதிபொரு யுகத்தில் மனிதன் க்ரமேண ப்ரக்ரதியை யடைந்துக்கொண்டு நடந்தேரி வருகிறது இதினின்றும் உன்னதியை அடைவதற்கே மனுஷ்ய பிராணிகளிடத்தில் இரதக்க உத்தம இன்னும் அனுகரணங்களே முக்கியமானது இதர்க்கனு சாரமாக.

அரியசெல்வ மணியுமிக்:கெவ்வன
மரியகோத்திர மாயுளளா விலா
வரியகீர்த்தி யடையினு நன்மைசேர்
அரியகல்வியிலான் சவமாவனே.

இப்பேர்பட்ட கல்வியின் சகாயத்தினுலும் ஜனுங்கத்தினுடைய சகாயத்தினுலும் முன் தோரணையினுலும் தங்களுக்கு ஏற்படும் தொந்தாவுகளை பரிகரித்துக்கொண்டும் சுதாரணை செய்துக்கொண்டும் வருகிறுர்கள். இதர்க்குமேல் ஏதாவதொரு ஜனசமூகத்தினுடைய சுதாரணையாக வேண்டுமானுல் உத்தம கல்வி கைத்தொழில் வர்த்தகத்தொழில் விவசாயதொழில் இன்னும் அனேகவிதமான சிக்ஷணை ப்ராசாரம் செய்யவேண்டும்.

3. இப்பேர்பட்ட சுதாரண காலமானது 20-வது சதமானத்தில் இடி ஈரோபியகண்ட ராஜ்யம் (அதாவது இந்த ஜம்பூத்வீபதாதகிஷண்ட) இந்த சிக்ஷணை ப்ரசாரத்தினுல் சம்பத்துடையதாயும், பலாட்டியங்களாயும் ஆயிருந்தது இங்கிலீஷர், அமெரிக்கர், ஜர்மன், ஜபானியர்கள் முதலானவர்கள் ஸ்திதியை பாருங்கள். அந்த ஜனுங்கத்தில் அப்பேர்பட்ட சிக்ஷண ப்ரசார மேகாரணீ பூதமாயிருக்கிறது உடம்பின்மேல் வஸ்திரமில்லாமலும் இருக்ககூட வீடு

வாசலில்லாமல் ஆரண்ய வாசிகளான பூர்வகாலத்திய இங்கிலீஷர் இப்பொழுது பூமியின்மேலே 5 கண்டங்களில் தங்கள் சாம்ராஜ்யத்தை நிலைநிருத்தி யந்த்ர சாஸ்திர, ரசாயன சாஸ்திர, ப்ராணி சாஸ்திர, பூகர்ப சாஸ்திர முதலான அனேக சாஸ்திரங்களில் பாரங்கதராகி புகைவண்டி முதல் செய்துக்கொண்டு மோடார்கார் கிட்சன் லாய்ட் முதலானதுகள் அனேக விதமான இகலோகத்திய சுகசாதனைகளை செய்துக்கொண்டு சௌக்கியமாக வாழ்வைசெய்துகொண்டிருக்கிறார்கள் இதெல்லாம் சிக்ஷணை மகத்வமில்லாமல் வேறென்ன?

4. இப்பேர்பட்ட ராஷ்ட்ரமான நம்முடைய ஹிந்து தேசத்தில் நிஜமான சிக்ஷணை அகப்படாத காரணத்தினாலே நமக்கு இப்பேர்பட்ட ஸ்திதி ப்ராப்தமாயிருக்கிறது. படிக்க எழுதமட்டும் கற்றுக் கொண்டாலோ சிக்ஷண ப்ரசாரம் செய்தாய் விட்டது என்று சிலர் அபிப்பிராயப் படுகிறார்கள். ஆனால் இது தப்பு. படிக்க எழுதமட்டும் தெரிந்து விட்டால் சிக்ஷண ப்ரசாரம் செய்ததாகவில்லை சிக்ஷண ப்ரசாரம் செய்கிற வழியானது வேறாய் இருக்கிறது படிப்பது எழுதுவது முதலாவது மெய்யாகிறது அப்படிபடிபபது எழுதுவதை கற்றவரே உத்தம சிக்ஷணையை அடைவார்கள். எப்படி என்றால் ஏதாவதொரு ஜனங்கத்தில் சிட்சண ப்ரசாரமாகிறதோ இல்லையோ என்று பார்க்க வேண்டுமானால் அவர்களில் படிக்க எழுதுபவர்களுடைய சங்கியை மேலே தெரிந்துக் கொள்ளலாம். இங்கிலண்டிலிருக்கிற ஜனசங்கியையினாலே படிக்க எழுதுகிறவர்கள் சங்கியை அதிகமாய் இருப்பதனால் அவ்விடம் சிக்ஷண ப்ரசாரம் அதிகமாய் இருக்கிறது நம்ம தேசத்தினுடைய ஜனசங்கியை ப்ரமானத்தி நின்றும் படிக்க எழுத தெரிந்தவர்களுடைய சங்கியை சுல்பமாய் இருப்பதனால் நம்பபாடு இந்த ஸ்திதியிலிருக்கிறது உண்மையான சிக்ஷணையில் 5 பேதம் உண்டு சாரீரகசிக்ஷண, நீதிசிக்ஷண, தார்மீகசிக்ஷண, சமாஜிகசிக்ஷண, ராஜநீபசிக்ஷண, எந்த சமாஜத்தில் சிக்ஷண ப்ரசாரமாக வேண்டுமென்று அபேக்ஷை இருக்கிறதோ அவர்கள் படிக்க எழுத தெரிந்தபிறகு மேலே வர்ணிக்கப்பட்ட அஞ்சு விதமான சிக்ஷணயினுடைய பழக்கத்தை செய்துகொள்ளவேண்டும்.

இன்னும் வரும்.

விருதூர். திரு. அப்பாண்டை நயினார்
அனந்தபுறம் ஸ்கூல்டீச்சர்,
ஜாகீர் ஆரணி.

இரகஸ்யபுரி மர்மம்.

அத்தியாயம் 4.

(முன்தொடர்ச்சி புத்தகம்-6, சஞ்சிகை-7, பக்கம் 176)

கள்வர் குகையில் அம்புஜவல்லி.

என்று இவ்விதமாக ப்ரலாபித்தான். இதற்குள் வீட்டிலிருந்த வேலையாட்களெல்லாம் அம்புஜத்தைக் காணவில்லையென்று நந்தவனம் ஆறு குளம் குட்டை முதலிய விடங்களிலெல்லாம் அலைந்து திரிந்து தேடினார்கள். என்ன தேடியும் என்ன பயன். அம்புஜம் எங்கேயோ போய் விட்டாள் என்று தீர்மானித்து விட்டார்கள். அநங்கனுக்கு இன்ன செய்வதென்று தோன்றவில்லை. பித்தம் பிடித்தவன் போலாய் விட்டான். ஆகாரமெடுக்கவுமில்லை. அயல்வீட்டார்கள் வந்து "ஏனழுகிறீர். எழுந்திருந்து சாப்பிடும். ஓடிப்போன கழுதை தன்னாலே திரும்பி வரும். சும்மா அழாதேயும்போம்" என்று சமாதானம் செய்தார்கள். என்ன சொல்லியும் என்ன. அநங்கன் சிறிது நேரத்திற்குத் தான் உயிருடனிருப்பதாகவே நினைக்கவில்லை.

நேயர்காள்! இவ்வாறு மனம்பதைக்கும் அநங்கனை நம்பிக்கைத் துரோகம் செய்தவன் வளர்ப்புத் தந்தை தானே! என்று யாராகிலும் கூற மனந்துணிவார்களா?

இரவு மணி ஒன்பதிருக்கும் அநங்கன் தான் உட்கார்ந்திருந்த இடத்தை விட்டெழுந்திருந்து அம்புஜவல்லியின் அறைக்குச்சென்று அவளது பெட்டியைத் திறந்து பார்த்தான். அதில் லம்பர் துரையவர்களுக் கெழுதிய கடிதம் பத்திரமா யிருக்கக் கண்டான். சிறிது யோசித்தான். நாம் கடிதத்தையாவது லம்பர் துரையவர்களிடம் எடுத்துச் சென்றுப் பின் அவர்களினுதவியால் நமது அருமையான அம்புஜத்தைக் கண்டு பிடிக்கலாம் என்று ஒருவாறு மனந்தேறி அந்த லெட்டரையு மெடுத்துக்கொண்டு யாரும் அறியாமல் வெளிக்கிளம்பி விட்டான்.

நல்ல இருட்டு வழியோ மிகவும் கஷ்டமானது. மரமடர்ந்த காட்டினூடே செல்கின்ற சாலை மார்க்கமாய்த் தான் நேரே சென்னைக்குச் செல்லவேண்டும். ரெயில் மார்க்கமாய்ச் செல்ல அச்சமயம் ரெயில் ஒன்றும் புறப்படவில்லை. மறுநாட் காலையில் தான்

புறப்படுகின்றது. மேலும் ரெயில் மார்க்கமாய்ச் செல்ல அவன் மனங் கூசினான். ஆகையால் சாலைவழியே நடந்தான். இருளோ எங்கும் வியாபித்திருந்தது. அக்கம் பக்கங்களிலுள்ளது வயல்களா? அல்லது காடா? என்று அரங்கனால் நிர்ணயிக்க முடியாமல் போயிற்று. கால்கள் இன்ன இடம் போகிறோமென்று அறியாமல் சென்றன. இவ்வளவில் காற்றும் மழையும் கலந்தடிக்க ஆரம்பித்தது. அரங்கன் யாதுசெயவான்! பரிதாபம் பக்கத்திலுள்ள மரத்தடியில் சற்றே தங்கினான். என்றாலும் காற்று வளைத்துவளைத்து அடித்தபடியால் அரங்கன் தேகம்பூராவாக நனைந்துபோயிற்று. குளிரால் மிகவும் வருந்தினான். சென்னைக்குச் செல்லும் பாதையிது தானோ அல்லவோ? என்னும் சந்தேகமுமுண்டாய் விட்டது. அரங்கனுக்கு இன்ன செய்வது என்று தோன்றவில்லை. சுற்றுமுற்றும் பார்த்தான். வெகுதூரத்தில் ஒரு மினுமினுப் பூச்சிபோல் வெளிச்சம் ஒன்று தோன்றிற்று. அங்கு சென்றாகிலும் சற்று தங்களாம் என்று உத்தேசித்து வெளிச்சம் தெரிந்த திசையை நோக்கி நடப்பானான்.

இரவு மணி மூன்றிருக்கும். முன் அரங்கனுக்குத் தென்பட்ட குடிசையிலுள்ளவர்கள் ஒருகிழவனும் கிழவியுமே. அவர்கள் இன்ன வழியாய்க் காலக்ஷேபம் செய்கிறார்களென்பது மறைபொருள். ஆனால் இதுமட்டும் நிச்சயம். அவர்கள் அன்றுயாரோ ஒருவரை எதிர்ப்பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் நினைத்த மணிப்ரகாரம் வரவில்லை அந்த மனிதன் அதனால் அவர்கள் மனவியாகூலமடைந்து ஒருவருக்கொருவர் பின்வருமாறு பேசிக்கொண்டிருந்தார்கள்.

கிழவன்:—அடியே! கிழட்டுமுண்டை! அவன் இன்று மணி இரண்டிற்கு வருகிறான் என்றாயேடி எங்கே காணோமே! இப்படித் தானே என்னை ஏமாற்றிக்கொண்டு வருகிறாய்.

கிழவி:—நாதா! என்ன ரொம்ப வீசாயளே! நீங்கரொம்ப கெட்டிக்காரங்களோ? அடேயப்பா ஆளப்பாரு உங்களுக்குக்கூட நான் தானே கொட்டவேண்டியிருக்கிறது. வீட்டைவிட்டு வெளியிலேயோ மாட்டேனென்று கழுத்தையறுக்கிறது. மேலாவிலேயும் அதிகாரம் கூடப்பண்ணாது. ஏதோ அவன் அன்று இரண்டு மணிக்கு வருகிறேன் என்றான். கணக்காரண்டுமணி இன்னுரண்டுமணிக்குவரல்லே; முன்னுப்பின்னு வருவான் இதற்காக என்ன என்ன

மோ விறட்டறயளே! இப்படியின்னம் ஒருதரம் பேனேனுன் வெளியிலிறங்கி விடவேண்டியதுதான்.

கிழவன்:—அடியே! முண்டை! என்னடி ஒருவார்த்தை பேசறத்துக்கு முன்னாலே அடுக்கிட்டையே. உன்னை இப்போ என்னடி சொல்லிவிட்டா. ப்ரமாதமாவிசறயே. மணி மூன்றுச்சு நான் படுத்துக்கப்போறேன். தூக்கம் வந்துடுத்து. நீதானே முழிச்சுண்டிரு.

என்றுதடபுடலாக எழுந்திருந்து அடுத்த அறையிலுள்ள ஒரு வைக்கோல் பரப்பிய மெத்தையில் படுத்துக் கொண்டான்.

இந்த சந்தர்ப்பத்தில் அநங்கன் வாசலில்வந்து கதவைத்தட்டினன் உள்ளிருந்த கிழவி 'யார்?' என்று வினவிக்கொண்டே வாயிற்கதவண்டைவந்து கதவை மெதுவாய்த் திறந்தாள். உடனே அநங்கன் "நீ விர்யாராயிருப்பினும் சரி. இன்றிரவு மாத்திரம் மழைக்குத் தங்கிப் பின் நாளைக்காலை ப்ரயாணப் பட்டுவிடுகிறேன். தயவுசெய்ய வேண்டுமம்மா?" என்று குளிரின் உபத்திரவத்தால் மடமடவென்று உட்புகுந்தான். பார்த்தாள் கிழவி. ஆளைப்பார்த்தால் நல்ல பலமுள்ளவனாய்த் தோன்றுகின்றது. மடமடவென்று உட்புகுந்துவிட்டான். ஒருவேளை போலீஸ் அதிகாரியா யிருக்கலாமோவென்று திகிலடைந்தாள்.

நேயர்காள்! நமது அநங்கனுக்கு வயது ஐம்பது ஆனாலும் பலம் மாத்திரம் குறையவில்லை யென்பதை மனதில் வைத்து கொள்ளவேண்டும்.

கிழவி இம்மனிதன்பாவனோ? நம்மை யாதுசெய்வானோ? என்ற ஏக்கம் பிடித்தவளாய் அநங்கன்முன் வராமல் மெதுவாய்த் தனது பர்த்தா இருக்கும் அறைக்குச் சென்றாள். மறுநிமிடம் கிழவனும் கிழவியும் அநங்கனிருக்கு மிடத்திற்கு வந்து சேர்ந்தார்கள்.

சேர்ந்ததும் அநங்கனைப் பார்த்து "ஐயா! உமக்கு எந்த ஊர்? ஏன் இங்கே வந்திரென்று" கிழவன் அவனைப் பார்த்துக் கேட்டான்.

அநங்கன்:—ஐயா! நானோர் வழிப்போக்கன் என்பெயர். யாத்திரை நிமித்தம் புறப்பட்டு வந்தேன். இரவில் மழை யதிகரித்ததால் இங்கு சற்று தங்கியிருந்து நாளைக்காலை சென்றுவிடுகிறேன்' என்னால் தங்களுக்கு யாதொரு கெடுதியும் நேரிடாது.

பார்த்தான் கிழவன் இதேது தர்ம சங்கடமா யிருக்கிறது. நமது ஆள் இன்னிக்கி வருவான். இவனும்கூட இருந்தால் ஜோலி

ருக்கே என்று எண்ணி "ஐயா! நீர் இவ்விடமிருக்கக் கூடாது. எங்கள் ஆள்வரும் அப்போ நீயிருக்கப்படாது" கிழவன் சொன்னான்.

அநங்கன் :—அய்யா! நான் உங்களை யொன்றும் செய்பவில்லை. அடுத்த அறையில் படுத்து உறங்கி விடுகிறேன். தயவு செய்யுங்களய்யா! என்று கெஞ்சினன். கிழவனும் இவன் சொல்வது சரிதானென்று எண்ணித் தான்படுத்திருந்த அறையினுள்ளிட்டுப் போய்ப் படுக்க வைத்தான். "நீர் ஏதாவது எங்களுக்குத் தீங்கு செய்திரால் இதோபாரும் இதுதான் உமது கதி" என்று தன் கையிலுள்ள குழல் துப்பாக்கியைச் சுழற்றினன். பின் கதவைத் தாளிட்டு விட்டுச் சென்றான்.

இதை யெல்லாம் பார்த்த அநங்கன் "இவர்கள் யாரோ கள்வர்கள்போல் தெரிகிறது. இருந்தாலென்ன. நாம் சிறிது நேரம் துஞ்சிவிட்டுப் பின் நமது காரியத்தில் கண்ணுய்ச் சென்று விடுவோம்" என்றுத்தேசித்துப் படுத்தான். தூக்கம் வரவில்லை. அம்புஜத்தைப் பரிகொடுத்த விபாகூலத்தாலும் இவர்கள் கள்வர்களே என்ற ஏக்கத்தாலும் படுக்கையில் படுத்தபடியே ஏதேதோ அலோசனை செய்து கொண்டிருந்தான். இச்சமயத்தில் வாசற்கதவு திறக்கும் சப்தம் கேட்டது. உடனே அநங்கனுக்குத் 'தன்னுடைய ஆள்வருவானென்று கிழவன் சொன்னது ஞாபகத்திற்கு வந்தது. சந்தேகங் கொண்டான். உடனே எழுந்து கதவண்டை வந்தான். அதிலிருந்த ஒரு சிறு துவாரத்தின் மூலமாய் கண்ணை வைத்துக் கொண்டு பார்த்தான். திடுக்கிட்டான். ஏன்? அநங்கனை மனந்திடுக்கிடச் செய்த அந்த வஸ்துயாது?

நேயர்களே! கதவைத்திறந்து உள்ளேவந்தவன் தனபாலர் வீட்டுக் கணக்கன் பாணனே! அநங்கன்கீழ் வேலை பார்த்தவனே அன்று அறையில் அம்புஜம் தன்னுடைய லெட்டரின் சாராம்சத்தை எடுத்துரைக்கும் பொழுது உற்றுக் கேட்டுக் கொண்டிருந்த அந்தப்பாணனே!

(தொடரும்)

P. N. Sankaranarayanayyar,
Son of
P. S. Narayanaswami Ayyar Avl.,
Pananjady.

210455